பக்கங்கள்-16 18.மார்கழி.2016 விலை-30.00




நடுநிலை இதழ்
# தினப்புயல்
PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -182



## தேசியத் தலைவரின் போராட்டத்தையும், புலிக்கொடியையும் லண்டனில் அவமதித்த முதலமைச்சர் விக்னேஸ்வரனின் பின்னணி

## முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் இஸ்லாம் முழுமையாக நிலைத்திருக்கவேண்டும்



## இலங்கையின் புதிய அரசியல் அமைப்பும், யானை பார்த்த குருடர்களின் நிலையும்

Vanni Inn

email - vanni_inn@yahoo.com

**Chinese, Indian, Sri Lankan Food available**



**Hotel Vanni Inn**

A/C Room, Non A/C Room, Com Room, Quality Foods, Hall, Vehicle Parking

வவுனியா மண்ணில் நவீன வசதிகளுடன் சுவடிய மங்கலகரமான அனைத்து நிகழ்வுகளுக்கும், மண்டபத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

2nd Cross Street, Vavuniya. Tel:- 0242222074, Fax:- 0242222074

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# தேசியத் தலைவரின் போராட்டத்தையும், புலிக்கொடியையும் லண்டனில் அவமதித்த முதலமைச்சர் விக்னேஸ்வரனின் பின்னணி

தமிழ் மக்களின் போராட்ட வரலாறு என்பது மூன்று தசாப்த காலங்களைத் தாண்டி இன்று ஒரு ஜனநாயக வழியில் பயணித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் இந்த வழியினைக் குழப்பும் நோக்கில் பல்வேறான தீய சக்திகள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. 'வானத்தால் போன சனியனை ஏணிவைத்து இறக்கியதை'ப்போன்று சிவனே என்றிருந்த விக்னேஸ்வரனை சம்பந்தனும், சுமந்திரனும் இணைந்து முதலமைச்சர் ஆக்க வேண்டுமென்று முனைப்போடு செயற்பட்டு. அவரைத் தமிழ் மக்கள் மத்தியில் நல்லவராகக்காட்டி இன்று வடமா காண சபையின் முதல்வராக நிலை நிறுத்தியுள்ளனர்.

தமிழரசுக் கட்சி. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களின் ஆதரவோடு முதல்வர் ஆசனத்தில் அமர்ந்த விக்னேஸ்வரன் அவர்கள் தனது சுயரூபத்தை தற்போதுதான் வெளிப்படுத்தி வருகிறார். தமிழரசுக் கட்சியினது கட்டுக்கோப்புக்குள் செயற்பட்டு வந்த விக்னேஸ்வரன் பதவியேற்ற 06 மாதங்களின் பின்னர் தனது தன்னிச்சையான அரசியலை செயற்படுத்தத் தொடங்கி விட்டார். இதன் காரணமாக தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களிடையேயும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர்களோடும் எதிர்ப்பினைச் சம்பாதிக்கத் தொடங்கிவிட்டார் முதல்வர் விக்னேஸ்வரன்.

மாகாண சபைக்கு ஏன் முதல்வர் விக்னேஸ்வரனைக் கொண்டு வருகின்றீர்கள். அவர் சிங்களப் பேரினவாதத்துடன் இரண்டறக் கலந்தவர். வடகிழக்கு வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகள் அவருக்குத் தெரியாது. இவ்வாறிருக்க முதலமைச்சர் வேட்பாளராக இவரைப் போட்டியிடவைப்பதற்கு மாவை சேனாதிராஜா உட்பட பலர் போர்க்கொடி தூக்கினர். எதிர்ப்புத் தெரிவித்தவர்களிடம் சம்பந்தன் கூறிய விடயம் என்னவெனில். விடுதலைப்புலிகளின் போராட்டம் மௌனிக்கப்பட்டு. ஒரு அரசியல் முன்னெடுப்பு சர்வதேச நாடுகளின் உதவியோடு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்று சர்வதேச சமூகம் படித்த, நன் மதிப்பைப்பெற்ற ஒருவரின் தலைமைத்துவத்தையே எதிர்பார்க்கிறது. எனவே இவர் ஒரு ஓய்வுபெற்ற நீதியரசர். தேசத்தினதும், மக்களதும் அரசியலைப் புரிந்துகொண்டு செயற்படுவார் என்பதே அவருடைய நம்பிக்கையாகவிருந்தது. ஆகவே ஒருமுறை இவரை நாம் மாகாண சபையின் முதலமைச்சராகத் தெரிவுசெய்து தமிழ் மக்களுக்கானத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் பணியில் செயற்படுவோம் என்றார்.

இரா.சம்பந்தனது பெருமைகளைப் பாராட்டினாலும் கூட. பின்னணியில் யார் யார் இருக்கிறார்கள். யாருடன் சொந்த பந்தத்தில் இணைந்திருக்கிறார் என்கின்ற விடயங்களை அறிந்தும் இவரை அரசியலுக்குள் உள் நுழைத்துக்கொண்டது என்பது தவறான ஒரு விடயமே. ஏன் இவரை முதல்வராக நியமித்தோம் என தமிழரசுக் கட்சி இப்போது சிந்திக்கறது. சம்பந்தன், சுமந்திரன் போன்றோர் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கிருக்கும் நாடு கடந்த தமிழீழ அரசின் ஆதரவாளர்கள் இன்னும் தேசப்பற்றுக் கொண்டவர்களுடன் பேசும்போது பல்வேறான மாற்றங்கள் ஏற்படுகிறது. அதுபோல முதல்வர் விக்னேஸ்வரன் அவர்கள் அண்மையில் லண்டனுக்குச் சென்றபோது அங்கு விடுதலைப்புலிகளது தேசியக் கொடியினை ஏற்றுமாறு பணிக்கப்பட்டார். அதனைத் தான் ஏற்றப்போவதில்லை என அவர் ஏற்பாட்டுக்குழுவிடம் தெரிவித்துள்ளார். தற்போது நாடு கடந்த தமிழீழ அரசில் எவ்வாறான தவறுகள் இருக்கிறது என்பதை அறிந்துகொண்ட முதல்வர் தமது அரசியல் வியூகங்களை மாற்றிக்கொண்டுள்ளார். சிங்களவர்கள் விமர்சிப்பார்கள் என்கிற விடயம் தெரியும். காரணம் இவர்கள் ஸ்ரீலங்காவில் தான் பிறந்தவர்கள். தேவைப்படின் அரசியல் ஆலோசனைகளை வாசுதேவவிடம் பெற்றிருப்பார்கள். அதில் எவ்வித மாற்றுக்கருத்துக்களும் இல்லை.



குறிப்பாக சர்வதேச நாடுகளில் விடுதலைப்புலிகள் செயற்பட அந்தந்த நாடுகளில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தில் தடை நீக்கப்பட்டுள்ளது. அங்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் விடுதலைப்புலிகளின் புலிக்கொடியை ஏற்றாமல் நாடு திரும்பியுள்ளது என்பது அவர் விடுதலைப்புலிகளை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனோடு தேசியம். சுயநிர்ணயம் என்ற நிலைப்பாட்டில் இவரது பங்களிப்பு என்ன? என்கிற கேள்விகள் எழுகின்றன. இனப்படுகொலை என்ற தீர்மானத்தை வட மாகாணத்தில் நிறைவேற்றியுள்ள விக்னேஸ்வரன் நாடு கடந்த தமிழீழ இயக்கத்தோடு தனது உறவினை முறித்துக்கொண்டமையானது தமிழ்த்தேசியத்திற்கும். தமிழினத்திற்கும் துரோகம் ஏற்படுத்தி விட்டார் என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

தற்போது வடமாகாண சபையினது நகர்வானது சிங்கள அரசியல்வாதிகள் கேலி செய்யும் அளவிற்கு மாற்றம் பெற்றுள்ளது. சிங்கள அரசியல்வாதிகள் ஊழல்களில் ஈடுபட்டு தமிழ் மக்களது சொத்துக்களைக் கொள்ளையடிக்கிறார்கள். இவற்றை வெளிச்சம் போட்டுக்காட்ட மறுக்கும் தமிழ் ஊடகங்கள் வடகிழக்கில் இடம்பெறும் மோசடிகளை வடக்கு அமைச்சர்கள்தான் செய்து வருகின்றனர் என்கிற குற்றச்சாட்டினை முன்வைத்து அவர்களது அரசியலுக்கும் பிரச்சினைகளை உண்டுபண்ணியுள்ளனர்.

ஊழல் மோசடியில் ஈடுபடும் அமைச்சர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக முதல்வர் ஒரு குழுவினை நியமித்துள்ளார். குழு நியமிக்கப்பட்டதன் நோக்கம் தன்னை சமூகத்திற்கு நல்லவர் எனக்காட்டி தனக்கெதிராகச்செயற்படும்மாகாண சபை உறுப்பினர்களை குற்றவாளிகள் எனச் சொல்வதற்கே இச்செயற்பாடு. மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு 04வருடங்களைக் கடக்கவுள்ள நிலையில் இன்னமும் தமிழ் மக்களுக்கானத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் முதல்வராக பதவிப்பிரமாணம் செய்துகொண்டமையானது பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ அவர்களையே ஆட்சிக்குக் கொண்டுவரும் நோக்கில் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் செயற்பாடுகள் அமையப்பெற்றுள்ளது என்று தற்போது கண்டறியப் பட்டுள்ளது. எந்தவொரு சந்தர்ப் பத்திலும் மஹிந்தவோ அல்லது விக்னேஸ்வரனோ விட்டுக்கொடுத்துப் பேசியதில்லை. இருவருக்குமிடையில் நெருங்கிய தொடர்புகளையே வைத்திருந்தனர். தமிழினப் படுகொலையினை மேற்கொண்ட மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் கைகளினால் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட பொழுதே இவர் பற்றிய உண்மைகள் கசியத்தொடங்கின. ஆனால் ஒரு நீதியரசர். தமிழ் மக்களுக்கெதிராகச் செயற்படமாட்டார் என்ற நிலைப்பாட்டை தமிழரசுக்கட்சி கொண்டிருந்தது.

த.தே.கூட்டமைப்பின் உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன். அரியநேந்திரன். பொன். செல்வராசா. சுரேஸ் பிரேமச்சந்திரன். மாவை சேனாதிராஜா. சித்தார்த்தன் உட்பட பலர் இவரை எதிர்த்தனர். ஆனால் இப்பொழுது சுரேஸ் பிரேமச்சந்திரன். சிறிதரன். சாந்தி ஸ்ரீஸ்காந்தராசா இன்னும் பலர் இவரது போக்கினை ஆதரித்துவருகின்றனர். தற்போதுதான் அவருக்கு ஞானம் பிறந்திருக்கிறது என அவரை எதிர்த்தவர்கள் கூறுகிறார்கள். முதல்வர் விக்னேஸ்வரனை ஆதரிப்பவர்கள் அவரது பின்னணி பற்றியும் அறிந்திருக்கவேண்டும்.

பாலியல் சுவாமி பிரேமானந்தாவின் சீடர்களில் இவரும் ஒருவர். அவரை தனது மானசீகமான குருவாக ஏற்றுப் பூசித்துவருகின்றார். இதுதொடர்பில் ஊடகங்கள் பல்வேறான செய்திகளை வெளியிட்டன. நீதியரசர் தவறு செய்தால் அது தவறல்ல என்பதையே இவ்விடயங்கள் எடுத்துக்காட்டுகிறது. ஏன் இவரை முதல்வராக நியமித்தோம் என தமிழரசுக்கட்சி தற்போது எண்ணிக்கொண்டிருக்கிறது. தன்னை தமிழரசுக் கட்சி ஓரங்கட்டுகிறது என நினைத்த விக்னேஸ்வரன் தனது அரசியல் காய்நகர்த்தல்களை மேற்கொள்வதற்காக சுரேஸ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்களை தன்வசம் திசைதிருப்பிக்கொண்டார். தற்போது தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு ஒன்றையும் உருவாக்கியுள்ளனர். இதில் அவர் இணைத்தலைவராகச் செயற்படுகின்றார். அதன் பின்னர் இத்தமிழ் மக்கள் பேரவை ஒரு எழுச்சியை உருவாக்கவேண்டும் என்பதற்காக எழுக தமிழ் பேரணியொன்றை யாழில் ஏற்பாடு செய்திருந்தது. சுரேஸ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரை இணைத்துக்கொண்டு அரசியல் செய்வதல்ல இவரது நோக்கம். தொடர்ந்தும் பதவிகளுக்காகவே தனது தந்திரங்களை நகர்த்தி வருகிறார். தமிழரசுக் கட்சியினால் ஓரங்கட்டப்பட்டவர்களை முதல்வர் விக்னேஸ்வரன் அவர்கள் தன்வசம் வைத்துள்ளார். தனக்கு முதல்வர் பட்டம் கிடைக்க காரணமாகவிருந்த சம்பந்தன். மாவை சேனாதிராசா. சுமந்திரன் போன்றோரை தற்போது இவர் கணக்கில் எடுப்பதில்லை. தான் போகும் பாதை சரி எனச் செயற்படுகின்றார்.

இவர்களது அதிகாரப் போட்டிகளுக்கு மத்தியில் தமது நிகழ்ச்சிநிரலைச் செயற்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. தமிழ் மக்களை ஏமாற்றும் அரசியல் செயற்பாடுகள் தொடர்கின்றன. முதல்வர் விக்னேஸ்வரனுடன் இணைந்துஒருசில அரசியல்வாதிகள் செயற்படுகின்றார்கள். இவர்கள் முதல்வரின் அரசியல் பின்னணி தெரிந்தும் அவரை வைத்தே தமது அரசியலை பலப்படுத்தமுடியும் என்றே எண்ணியுள்ளனர்.

தமிழ் மக்களது அரசியலைப் பொறுத்தவரையில். தற்பொழுது அரசாங்கத்துடன் இணைந்த அரசியல் பாதையிலேயே தமிழ்த் தரப்பினர் பயணிக்கின்றார்களா? என்கிற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. இதில் நாம் எமது தனித்துவத்தைக் காட்டவேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றோம். எமது தனித்துவத்தைக் காட்டுவோம் என முந்தியடித்துக்கொண்டு முதல்வர் லண்டனுக்குச் சென்று புலிக்கொடி ஏற்ற மறுத்ததன் விளைவாக அவர் சிங்களவர்கள் சார்ந்தவர் என்பதையும் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கின்றார். முதல்வருக்கு வக்காளத்து வாங்குபவர்கள் இதனை விளங்கிக் கொள்ளவேண்டும். இல்லையேல் எமது தமிழினம் பாதாளத்திற்குள் தள்ளப்படும் என்பதில் எவ்வித சந்தேகங்களும் இல்லை.

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## ஒற்றையாட்சியின் கீழ் இலங்கைக்குள் தீர்வுகள் என்பது சாத்தியமற்றது

வடகிழக்கினைப் பிரிக்கும் நோக்கிலேயே மாகாணசபைகளை மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் மிகத்தந்திரமாகக் கொணர்ந்தார். இணைந்த வடகிழக்காக செயற்பட்டுவந்த மாகாணசபை பிரிக்கப்பட்டதன் விளைவாக. குறிப்பாக வடகிழக்கு இணைப்பு என்பது பாரிய பிரச்சினையாகப் பேசப்படுகின்றது. மாகாண சபைக்கான அதிகாரங்கள் இருந்தும் அவை உரிய முறையில் அரசால் வழங்கப்படவில்லை என்பது அரசியல்வாதிகளின் குற்றச்சாட்டு. மாகாணசபைக்குரிய பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் இன்றும் அரசின் வசமே உள்ளது.

விடுதலைப்புலிகளின் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர். அவர்கள் கோரிய பிரச்சினைகளுக்கானத் தீர்வுகளை இன்றளவும் அரசாங்கம் வழங்கத் தயாராகவில்லை. மீண்டும் ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்கிற நிலைப்பாட்டுக்குள் இவ்வரசாங்கம் வந்துள்ளது. மாகாண சபைத் தேர்தலோ அல்லது பொதுத்தேர்தலோ வருகின்றபோது தமது வாக்கு வங்கியை நிரப்புவதற்காகவும், ஆட்சியமைப்பதற்காகவும் பொய்யான வாக்குறுதிகளை வழங்குவது மாத்திரம் அரசின் வேலை. 13,13+,18,18+,20,20+ அதற்கப்பால் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வுகள் வழங்கப்படும் எனக்கூறிய மஹிந்தவின் அரசு. ஆட்சி செய்த காலப்பகுதியில் மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஒன்றையேனும் நிறைவேற்றவில்லை.

மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்கள் மத்திய அரசின் தலையீட்டுடனேயே செயற்படுத்தப்படுகின்றது. வடகிழக்கில் இராணுவப் பிரசன்னம் என்பது யுத்தம் முடிந்த பின்னரும் அதிகளவில் காணப்படுகிறது. ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்கிற நிலைப்பாடு காணப்பட்டபோதுதான் தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். மீண்டும் அவ்வாறானதொரு நிலைக்கே தற்போதைய அரசும் இட்டுச்செல்கிறது. வடகிழக்கிற்கான சுய உரிமைகளை வழங்க அரசு ஏன் மறுக்கின்றது.


மாறிமாறி வந்த அரசாங்கங்கள் குறிப்பாக டட்லி-மைத்திரிபால சிறிசேன வரை தமிழ் இனத்தின் தீர்வுத் திட்டங்களில் எதை ஒழுங்காக வழங்கியிருக்கின்றார்கள். பாடத்திட்டத்தில் கூட தமிழரின் வரலாறுகள் மறைக்கப்பட்டு சிங்களவர்களின் வரலாறுகள் புகுத்தப்பட்டுள்ளது. அடக்குமுறைகளில் இது பாரியதொன்றாகும். த.தே.கூட்டமைப்பினருக்கு எதிர்க்கட்சிப் பதவி வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை சர்வதேச நாடுகளுக்கு எடுத்துக்காட்டவே இந்த நாடகம். எதிர்காலத்தில் ஆளும். எதிர்க்கட்சியுமே இந்நாட்டில் தமது அரசியல் அதிகாரங்களை நகர்த்தப்போகின்றார்கள். ஆகவே தமிழினத்தின் விடுதலைக்காகக் குரல்கொடுக்க இன்னுமொரு கட்சி இந்நாட்டில் உதயமாகவேண்டும் என்பது அவசியம்.

எதிர்க்கட்சியைப் பொறுத்தவரை. அரசசட்டத்தின் கீழ் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும். தமிழ்மக்களுக்கான தேசியம். சுயநிர்ணய உரிமைகளுக்காக குரல் கொடுப்பது யார்? முஸ்லீம் காங்கிரஸ். ஜாதிக ஹெல உறுமய. ஜே.வி.பி போன்ற பல கட்சிகள் இந்த எதிர்க்கட்சியுடன் இணைந்து கொள்ளலாம். எதிர்க்கட்சி என்பது தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல. நாட்டின் அனைத்து மக்களுக்குமேயாகும். ஒன்றில் த.தே.கூட்டமைப்பு எதிர்க்கட்சிப் பதவியைத் துறந்து த.தே.கூட்டமைப்பாக செயற்படவேண்டும். அப்பொழுதுதான் தமிழ் மக்களுக்காக பாராளுமன்றில் உரத்துக்குரல் கொடுத்து. உரிமைகளை வென்றெடுக்கமுடியும். ஆகவே ஒற்றையாட்சியின் கீழ் தீர்வுகள் என்பது சாத்தியமற்றது. இதனையே தொடர்ந்தும் முன்னெடுத்தால். தமிழினம் மீண்டும் தமது உரிமைக்கானப் போராட்டங்களை மேற்கொள்ளவேண்டிய நிலைமைகள் உருவாகும்.

**105**

அடுத்த நாள் (2000.01.05 வெள்ளி) வதனியின் பிளாட்டூனும். ஆனந்தியின் பிளாட்டூனும் ஜமுனாவுடன் கிளாலிப் பகுதிக்குச் சென்றன.

2001.01.07 அன்று சுகந்தி ஒரு அணியுடன் மாசார் பகுதிக்குப் போனார். ஆனால் மறுநாளே (2001.01.08) கிளாலிப் பகுதியில் நின்ற சோதியா படையணிப் போராளிகளை மாற்றிவிட்டு. அவர்களது முன்னரங்க நிலைகளைச் சுகந்தியின் அணி பொறுப்பெடுத்தது. இப்போது



# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி

ஜமுனாவுடன் நின்றவர்களும் சுகந்தியுடன் நின்றவர்களுமாக யாழ் நெடுஞ்சாலையின் இடது புறம் 01 தொடக்கம் 82ஆம் இலக்கம் வரையிலான நிலைகளில் நிலைகொண்டிருந்தோம். ஏற்கனவே அங்கிருந்த நிலைத் தகடுகளைப் புதிதாக மாற்றிக்கொண்டோம்.

அன்று 11ஆம் திகதி. பனிக்குளிரின் ஆட்சியில் அதிகாலை அடங்கிப்போய்க் கிடந்தது. எனினும் நாங்கள் தயார்நிலையில்தான். எங்களை வேவுபார்க்கவென முன்னகர்ந்து வந்த படையினரை சேரா 31இல் நின்றவர்கள் கண்டுவிட்டுச் சுட்டனர். முதற் சூடு காதில் விழுந்த அந்தக்கணமே விசைவில்லை விரல்தொட்டது. சுடுகலன்கள் பேசத்தொடங்கின. 40ஆம் நிலையில் நின்ற சுகந்தி 31ஆம் நிலைக்கு ஓடிப்போய் நிலைமையை நேரில் பார்த்தார். நிலைகளையும். அணிகளையும் மீள் ஒழுங்கு செய்துகொண்டார்.

இது நடந்து இரண்டு நாட்களின் பின் (2000.01.13) பகல் நேரத்தில் 45ஆவது நிலையில் நின்ற போராளிகள் வேலை செய்துகொண்டிருந்தார்கள். சுகி. சுகந்தி. ஜமுனா. நெல்சா நால்வரும் காப்பரண்களைப் பார்வையிட்டவாறு வந்துகொண்டிருந்தார்கள். அப்பகுதி அமைப்பு, இராணுவம் உடைப்பை ஏற்படுத்தக்கூடிய இடங்கள். அவர்களை நாம் பதுங்கித்தாக்க வாய்ப்பான இடங்கள் என்று எல்லாவற்றையும் பார்த்து. கதைத்தபடி இவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். 45ஆவது நிலையை இவர்கள் நெருங்கிக் கொண்டிருக்கையில். அது படையினரின் தாக்குதலுக்குள்ளானது.

அது ஒரு சுவையான சண்டைதான். படையினரை 45ஆவது நிலையில் நின்ற போராளிகள் மட்டும் தாக்கவில்லை. இடையில் வந்துகொண்டிருந்த சுகியும். நெல்சாவும் சேர்ந்தே சுட்டனர். தொலைத்தொடர்புக் கருவியுடன் நின்ற சுகந்தி இவர்கள் இருவருக்கும் ரவையேற்றிக் கொடுத்துக் கொண்டிருந்ததுடன். கட்டளைப் பணியகத்துக்கு நிலைமையைத் தெரியப்படுத்திக்கொண்டும் எறிகணை ஏவு தளங்களுக்கு எறிகணைகளை வீசுவதற்கான தூரம். பாகைகளை அறிவித்தவாறுமிருந்தார்.

எமது காவல் நிலையொன்றை வேகமாகத் தாக்கிவிட்டு. எடுக்கக்கூடிய பொருட்களை எடுத்துக்கொண்டு வேகமாகத் திரும்பிச்செல்லும் கற்பனையோடு வந்த படையினருக்கு இவர்களின் வீச்சான தாக்குதல். அதுவும் இரு முனைத் தாக்குதல் திகைப்பையும் தோல்வியையும் ஏற்படுத்தியது. வழமையாகச் சண்டை நடக்கும் இடத்தில் ஒருபோதும் அனைத்துப் பொறுப்பாளர்களும் இப்படி ஒன்றாக நிற்பதில்லை. அன்று தற்செயலாகக் களமுனையின் பொறுப்பாளர்கள் ஓரிடமாகச் சந்தித்துக்கொண்டார்கள். அவர்களே சண்டையைப் பிடித்துக் கொண்டார்கள். எம்மவர் தரப்பில் எந்த இழப்புமில்லை.

இரண்டு நாட்களின் பின் வந்த இரவு (2001.01.15) நிம்மதியற்ற இரவாக இருந்தது. அன்றிரவு ஆரணி நின்ற பக்கம் வழமைக்கு மாறாகத் தென்பட்டது. சிலவேளை படையினர் நகர்ந்துவந்து அந்தப் பக்கமாக உடைக்கலாம் என்ற ஊகத்தில் உடனேயே கையெறி குண்டுகளை எறிந்து. நகர்வு ஏதும் நடக்கின்றதா என்று பார்த்துக்கொண்டார்கள். ஒன்றையும் காணோம்.

சிறுரகக் கண்ணாம் பற்றைகளும். தலையில்லாத தென்னை மரங்களும். முறிந்து வீழ்ந்துகிடந்த பனைகளும். சிதைந்து போய்க் கிடக்கும் வடலிகளும் அங்கங்களை இழந்துநிற்கும் மாபலாவுமாக இருந்த தன் இயற்கை எழிலை இழந்துகிடந்த அந்தக் கிராமத்தின் காலைப் புதைக்கின்ற மணற்றரையூடே எமது நகர்வகழி வளைந்து நெளிந்து சென்றது. போர் நிறுத்தத்தை நாம் கடைப்பிடித்த காலப்பகுதியில் இராணுவம் செய்த மிகப்பெரிய சுற்றிவளைப்பு நடவடிக்கையாக கினிகிர-09 நகர்வு அமைந்தது.

2001.01.16 அன்றைய விடிகாலையில் எவருக்கும் குளிர்ந்ததாகத் தெரியவில்லை. எல்லோரும் எதிர்பார்ப்புடன் நின்றார்கள். காற்றுக்கூட தன் குளிர்ச்சியை வெளிக்காட்டாது சற்று அடக்கி வீசிக்கொண்டிருந்தது போல் பட்டது. ஏதோ ஓர் முனையில் பாரிய உடைப்பு ஒன்று நிகழத்தான் போகின்றது. எப்போது. யார்முன் என்பதுதான் தெரியவில்லை. எல்லோரும் ஆயத்த நிலையில். தேநீருக்காகத் தீ மூட்டுவதா. சற்றுத் தாமதிப்பதா என்ற யோசனையுடன் காத்திருந்தார்கள்.

விடிவதற்கு இன்னமும் வெகுநேரம் இருந்தது. இப்போதுதான் 4.00 மணி. ஆரணியின் நிலைக்குப் பக்கவாட்டாக நகரும் சத்தங்கள் கேட்டன. இது படையினராகத்தான் இருக்கவேண்டும். வேறு யார்? ஆரணி உற்று உற்றுப் பார்த்தவாறு குண்டுகளை எறிந்து தாக்கியபோது. அந்தத் திசையிலிருந்து எதிர்ப்புகள் எதுவும் வரவில்லை. ஆரணிக்கும். அடுத்துள்ள பூமகளின் நிலைக்குமிடையே 600மீ. இடைவெளி இருந்தது. இந்த 600மீ. இன் பின்பகுதி முழுவதும் பற்றையாக இருந்தது.

அந்த 600மீ இடைவெளியை நிரப்புவதற்கு இடையிலிருந்த காவலரண்களில் எம்மவர்கள் நிலைகொள்ளவில்லை. அதற்கு எங்களிடம் ஆட்களில்லை. தென்மராட்சியின் தென்பகுதியில் நடந்த சண்டைகளில் காயப்பட்ட எமது போராளிகள் காயம் மாறி இன்னும் வந்துசேரவில்லை. முழுமையாக முன்னரங்க காப்பரண்களின் வேலைகள் சீராக்கப்படவுமில்லை. நாங்கள் அவற்றைச் செய்துமுடிப்பதற்குள் படையினர் சண்டையைத் தொடங்கி விட்டிருந்தனர்.

காலை 5.50 மணியளவில் படையினர் எமது பகுதியை நோக்கிப் பரவலான எறிகணைவீச்சை ஆரம்பித்தனர். அந்த வேகத்திலேயே உடைப்புகளை ஏற்படுத்தியவாறு படையினர் எம்மைக் கடந்து பின்பகுதிக்குப் போய்க்கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்தினுள் நடந்ததுபோன்ற அதேமுறையிலான நகர்வு. ரவையொலிகளும். எறிகணைகளின் வெடிப்பொலிகளும் தனது அணிகளின் நெருக்கடியான நிலைமையை கேணல் விதுஷாவுக்கு விளக்கின. கட்டளைப் பணியகத்தில் நின்ற அவர் முன்னின்ற அணிகளுக்கு நிலைமைகளுக்கேற்ப கட்டளைகளை வழங்கிக்கொண்டிருந்தார்.

களத்துக்குள் நின்ற கட்டளைப் பொறுப்பாளர்களில் ஒருவரான ஜமுனாவைத் தொலைத்தொடர்புக் கருவி அழைத்தது. அந்த அழைப்பு இரகசியக் குரலில் ஒலித்தது.

"யார் ? யார் கூப்பிடுறது?"

"அது நானக்கா. அறிவரசி"

"எங்கை நிக்கிறாய்? நிலைமையைச் சொல்லு"

"நான் முன்னுக்கு துளசி ராமக்காவுக்குப் பக்கத்தில்"

இப்போது, எதிர்த்தரப்பினரின் PK LMG மிகக் கிட்டவாகக் கேட்டன. ரவைகள் கூவியவாறு வந்தன. எறிகணைகள் அருகருகே விழுந்து வெடித்தன. சிதறுதுண்டுகள் நாலாபுறமும் சீறியடித்தன.

இன்னமும் படையினரை நேரெதிர்கொள்ளாத நிலையில், அணிகள் எதற்கும் தயார்நிலையிலேயே நின்றன. இரண்டு பகுதிகளில் உடைப்பை ஏற்படுத்திய படையினர். எம்மவர்களை இருவேறு முற்றுகை வளையங்களுள் சிக்கவைத்தனர்.

தொடர்வான் ...

### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 679. | வீ.வே.இலக்கியா | விஜயா பெருமாள். | வவுனியா | 1999.11.10 | புளியங்குளம் ஓயாத அலைகள்3 |
| 680. | வீ.வே.சுவர்ணா | கோகிலவதனி யோகலிங்கம் | முல்லைத்தீவு | 1999.11.18 | மன்னார்-பெரியமடு ஓயாத அலைகள்3 |
| 681 | வீ.வே பரிதி | இந்துமதி பெருமாள் | கிளிநொச்சி | 1999.11.22 | மன்னார் -பெரியமடு ஓ.அலைகள்3 |
| 682. | வீ.வே.கோமளா | வதனி சதாசிவம் | யாழ்ப்பாணம் | 1999.11.22. | மன்னார் -பெரியமடு ஓ.அலைகள்3 |
| 683. | கப்டன்.அரசலா | துசியந்தினி இராசையா | யாழ்ப்பாணம் | 1999.11.22 | மன்னார் -பெரியமடு ஓ.அலைகள்3 |
| 684. | வீ.வே.சுடர்விழி | சுசீலா குணசீலன் | யாழ்ப்பாணம் | 1999.11.23 | மன்னார் -பெரியமடு ஓ.அலைகள்3 |
| 685. | 2ம்.லெப்.மாலா | மேரிவசந்தி சிங்கராசா | யாழ்ப்பாணம் | 1999.11.24 | மன்னார் -பெரியமடு ஓ.அலைகள்3 |

# முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் இஸ்லாம் முழுமையாக நிலைத்திருக்கவேண்டும்

அரசியல் எனும் சமூக நிர்வாகத்தை இஸ்லாம் அழகானதோர் வணக்கக் காரியமாகவே முன்வைத்துள்ளது. ஆகவே முஸ்லிம்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் யாவரும் அதனை புனிதமானதோர் வணக்ககாரியமாகவே முன்னெடுப்பார்களாயின் ஈருலகிலும் ஈடேற்றமடையலாம்.

அதிகாரங்கள் கொண்ட அரசியல் பிரதிநிதிகள் யாவரும் அல்லாஹ்வுக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.

அடுத்து தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்திய வாக்காளர்களுக்கு நம்பிக்கைக்குரியவர்களாகத் திகழ வேண்டும்.



இந்த நாட்டில் சிறுபான்மை மக்களாக வாழுகின்ற முஸ்லிம் சமுதாயத்தினருக்கு அதிகாரம் கொண்ட அரசியல் பிரதிநிதித்துவங்கள் இன்றியமையாதனவாகும். அல்ஹம்துலில்லாஹ் புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே. அவனுடைய பேரருளால் இன்று இலங்கைப் பாராளுமன்றத்தில் கணிசமான முஸ்லிம்கள் அங்கம் வகிக்கின்றார்கள்.

அவர்கள் நல்லறிவு ஞானங்களும் நீண்ட அனுபவங்களும் கொண்ட மக்களின் மதிப்புக்குரியவர்களுமாவார்கள்.

அதிகாரம் கொண்ட அரசியல் பிரதிநிதிகள் யாவரும் தம்மை அதிகாரத்தில் அமர்த்திய மக்களின் அபிலாஷைகளை தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

முஸ்லிம் சமுதாயம் தமது உயிர். பொருள் அனைத்தையும் விட சத்திய இஸ்லாத்தை மேலாக நேசிப்பவர்களேயாவார்கள். இஸ்லாத்தின் கட்டளைகளை முழுமையாக வாழ்க்கையில் நிலைநிறுத்திக் கொண்டிருக்க வேண்டியது ஒரு முஸ்லிமின் முதற்கடமையாகும்.

பரிசுத்தமான இஸ்லாத்தைப் பின்பற்றி வாழுகின்ற முஸ்லிம்கள் முற்றிலும் பரிசுத்தவான்களாக வாழ வேண்டும். அதற்குரிய முழுமையான சுதந்திரம். சூழல் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அன்றாடம் ஐவேளைத் தொழுகைகளும் ஒவ்வொரு முஸ்லிம் ஆண். பெண் மீதும் கண்டிப்பான கடமையாக விதியாக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களாக வாழுகின்ற ஒவ்வொருவரும் ஒவ்வொருநாளும் நேரம் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து நேரமும் தொழுதுதான் ஆகவேண்டும். மேலும் அந்தத் தொழுகைகளை கூட்டாகவே நிறைவேற்றவும் வேண்டும்.

இந்த நாடு முழுவதும் பரந்து வாழுகின்ற வர்த்தக சமுதாயமாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் முஸ்லிம்கள். மேலும் அவசர உலகில் இயந்திரமாய் இயங்கிக்கொண்டிருக்கும் இந்த முஸ்லிம்கள் குறிப்பிட்ட நேரத்தில் தொழுகைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு பள்ளிவாசல்களின் தேவை அத்தியாவசியமானதாகிவிடுகின்றது.

பரிசுத்தமான இஸ்லாத்தைப் பின்பற்றி வாழுகின்ற முஸ்லிம்கள் தமது உடலும். பொருளும். உழைப்பும் முற்றிலும் பரிசுத்தமானதாய் அமைவதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். ஹறாம் எனும் அசுத்தத்தை விட்டுப் பாதுகாத்து ஹலாலில் நிலைத்திருப்பவர்களே முஸ்லிம்களாவார்கள்.

முஸ்லிம் சமுதாயத்தினருடைய பொருளாதாரம் பரிசுத்தமானதாய் இருக்க வேண்டும். அதில் வட்டி எனும் நஜீஸின் வாடை கூட இருக்கக்கூடாது. ஆகவே இஸ்லாமிய வங்கிகளின் தேவைகள் வர்த்தக சமுதாயமாகிய முஸ்லிம்களுக்கு அத்தியாவசியமானதே.

அன்றாடம் நாம் உட்கொள்ளும் உணவுகள் முற்றிலும் பரிசுத்தமானதாய் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளும் தேவை ஒவ்வொரு முஸ்லிமுக்கும் உண்டு. சந்தையில் ஒரு உணவுப் பொருளைக் கையிலெடுத்ததும் அது பரிசுத்தமானது. ஹலால் என்று அனுமதிக்கப்பட்டது என்ற உத்தரவாதத்தை ஒரே பார்வையில் தீர்மானித்துக்கொள்ள அனைவரும் தேவையுடையவர்களே.

கடந்த காலங்களில் ஹலால் வேண்டாம் என்று கூச்சலிட்ட முஸ்லிம்களும் உள்ளனர்.

ஹலால் என்பது முற்றிலும் பரிசுத்தமானதையே குறிக்கின்றது. சுத்தம் வேண்டாமென்றால் அசுத்தத்தை அசிங்கமானதை அழுகிச் செத்ததையா இவர்கள் விரும்புகின்றார்கள்.

திறந்த பொருளாதாரத்தில் பல் நாட்டு உணவுப் பண்டங்களும் தாராளமாய்க் கிடைக்கும்.

இந்த நாட்டில் முஸ்லிம் சமுதாயம் உடனடியாய் அதனைப் பரிசுத்தமானது என்று உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவையுடையவனாகின்றான்.

பெண்கள் கண்ணியமாய் நடத்தப்பட வேண்டியவர்கள் என்பதை இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

விபசாரத்தைக் கொடிய பாவகாரியமாக எச்சரிக்கை செய்யும் இஸ்லாம் அதற்குரிய சூழல்கள் உருவாவதையும் தடுத்துள்ளது. பெண்கள் தமது அழகலங்காரங்களை. அங்கங்களை வெளிக்காட்டி நடமாடுவதை இஸ்லாம் தடை செய்துள்ளது.

முஸ்லிம் பெண்களுக்குரிய உடைகள் எவ்வாறு இருக்கவேண்டுமென்று அல்குர்ஆனிலும் ஹதீஸிலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் உடையணிந்துகொள்ளும் உரிமைகள் எந்த சக்திகளினாலும் மறுக்கப்பட முடியாது.

அதிகாரம் கொண்ட அரசியல்வாதிகள் யாவரும் தமக்கு அந்த அதிகாரத்தை வழங்கிய மக்கள் மீது கடமையுடையவர்களே. மேலும் அண்டசராசரங்களையும் படைத்தாளும் அல்லாஹ்விடம் அந்த மக்கள் பற்றி பதில் சொல்லியாகவேண்டியவர்களேயாவார்கள். அரசியல் பிரதிநிதிகளாய்த் திகழ்பவர்கள் இதனை மறந்துவிட முடியாது.

முஸ்லிம் சமுதாயம் உலகில் எங்கெல்லாம் எவ்வாறான சூழ்நிலைகளில் வாழ்ந்துகொண்டிருந்தாலும் அவர்கள் ஒரு தலைமைக்குள் கீழ்படிந்து கூட்டாக வாழவேண்டுமென்பதையே இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

தலைமைத்துவத்திற்குரியவர்கள் அல்குர்ஆன் ஸுன்னாவில் தெளிவான அறிவு ஞானம் கொண்ட அறிவாளிகள் எனும் உலமாக்களாக இருப்பதுதான் சிறப்பானதாகும். அதனடிப்படையில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவும் அதன் தலைமைப்பீடமும் இந்த நாட்டில் வாழும் பெரும்பான்மை முஸ்லிம்களினுடைய விருப்பத்திற்குரிய தலைமைத்துவமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

உலமாக்கள் எனும் அறிவாளிகளும் மக்களின் பிரதிநிதிகளான அரசியல்வாதிகளும் தம் சமுதாயம் பற்றி அல்லாஹ்விடம் பொறுப்புக்கூற வேண்டியவர்களாவார்கள்.

அன்றாடம் ஐவேளை அல்லாஹ்வை நினைவுகூரும் தொழுகை தம் சமுதாயம் முழுவதிலும் நிலைத்து நிற்கவேண்டும். அந்தத் தொழுகைகளைக் கூட்டாகக் குறித்த நேரத்தில் நிலைநிறுத்துவதற்கும் பள்ளிவாசல்கள் தேவை. அந்தப் பள்ளிவாசல்களின் பராமரிப்புக்கள். பாதுகாப்புகள் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

அன்றாடம் அத்தியாவசிய தேவைகளான உணவுகள் ஹலால் எனும் பரிசுத்தமானதாய் இருப்பதும் பொருளாதாரம் வட்டியை விட்டும் பாதுகாத்துத் தூய்மையான ஹலாலானதாய் அமைவதும் முஸ்லிம் சமுதாயத்தினருடைய தேவையாகும்.

ஒரு சமுதாயத்தில் பெண்கள் பாதுகாக்கப்பட்டு கௌரவமாய் நடத்தப்பட வேண்டியவர்களாவார்கள்.

பெண்களின் அழகலங்காரங்கள். மறைவிடங்கள் காட்சிப் பொருட்களோ விளம்பர சாதனங்களோ அல்ல.

மனிதன் நாகரிகமானவன். நல்லறிவு ஞானமும் நுண்ணறிவாற்றலும் கொண்டவன். கௌரவமானவன். மனிதத்துவம் எனும் புனிதத்தன்மை கொண்டவன். மட்டுமன்றி பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதியென்று முத்திரை குத்தப்பட்டவன்.

இத்தகைய சிறப்பான மனிதன் மனிதனாக வாழவேண்டும். மாறாக மனிதன் அசிங்கமான கால்நடைகள் போல் வாழ்ந்துவிடக்கூடாது.

அரைகுறை ஆடைகளுடன் வீதியில் நடமாடும் பெண்களின் அசிங்கமான கோலங்கள் நவீன மனிதனாகப் பரிணாமமடைந்துள்ள இன்றைய உலகுக்கு அறிவுடைமையானதா?

ஒரு முஸ்லிம் பெண்ணின் உடல் முழுவதையும் மறைக்கும் அழகான உடையை அறிவு ஞானம் கொண்ட எந்த மனிதனும் மறுப்பதற்கில்லை. ஆகவே இந்த நாட்டில் மட்டுமல்ல உலகமெங்கிலும் முஸ்லிம் பெண்கள் சுதந்திரமாய் ஆடை அணிந்து நடமாடும் சூழல் உருவாகவேண்டும்.

உலமாக்கள் எனும் அறிவாளிகள் தம் சமுதாயத்தை இஸ்லாத்தில் நிலைத்திருக்க அயராது உழைக்கின்றார்கள். இவ்வாறே மக்களின் பிரதிநிதிகளான அரசியல்வாதிகள் யாவரும் தமது சமுதாயத்தின் மத சுதந்திரம் பேணப்பட்டு. பாதுகாப்புடையவர்களாய் வாழ்வதை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

அரசியல் பற்றி இன்றைய அரசியல்வாதிகளைவிட தெளிவான அறிவு ஞானம் கொண்ட உலமாக்கள் இருக்கின்றார்கள். ஆகவே உலமாக்களின் வழிகாட்டலில் அனைத்து அரசியல்வாதிகளும் செயற்படுவதுதான் காலத்தின் தேவையாகும். பேரருளாளன் அல்லாஹ் பேரருள் புரிவானாக.

– பூகொடை நியாஸ்
எம்.மௌஜூத், கொலன்னாவ –

# இலங்கையின் புதிய அரசியல் அமைப்பும், 'யானை பார்த்த குருடர்கள்' நிலையும்



இலங்கைக்கு புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற பேச்சுக்கள் 2015. ஜனவரி 08இல் மைத்திரி - ரணில் அரசு உருவான நாளிலிருந்து பேசப்பட்டு வருகின்றது. ஆனால் இந்தப் புதிய அரசியல் அமைப்பு என்ன தேவைக்காகக் கொண்டு வரப்படுகிறது என்றோ. அது எப்படியானதாக அமையவிருக்கிறது என்றோ. அரசாங்கமும் சரி. எதிர்க்கட்சிகளும் சரி இதுவரை தெளிவுபடுத்தாத ஒரு நிலைதான் இருந்து வருகிறது. அதன் காரணமாக புதிய அரசியல் அமைப்பு சம்பந்தமாக 'யானை பார்த்த குருடர்கள்' நிலை ஒன்று நிலவுகின்றது.

சுதந்திர இலங்கைக்கு என இதுவரை மூன்று அரசியல் அமைப்புகள் வரையப்பட்டுள்ளன. முதலாவது அரசியல் அமைப்பு இலங்கை 1948இல் பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற பொழுது. பிரித்தானியரால் வரையப்பட்டு கையளிக்கப்பட்ட 'வெஸ்ற்மினிஸ்ரர்' முறையிலான சோல்பரி அரசியல் அமைப்பு.

'இந்த அரசியல் அமைப்பு பிரித்தானிய காலனித்துவவாதிகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காக வரையப்பட்டது. இலங்கையின் தேசிய நலன்களுக்கு எதிரானது' என்று சொல்லி. 1970இல் பதவிக்கு வந்த திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி. லங்கா சமசமாஜக் கட்சிகளைக் கொண்ட கூட்டரசாங்கம். 1972இல் புதிய குடியரசு அரசியல் யாப்பொன்றை அறிமுகம் செய்தது.

இந்த அரசியல் அமைப்பில் பல நல்ல விடயங்கள் இருந்தபோதிலும். சோல்பரி அரசியல் அமைப்பில் சிறுபான்மை இனங்களுக்குப் பாதுகாப்பாக இருந்த 28ஆவது சரத்து நீக்கப்பட்டுள்ளது என்று சொல்லியே தமிழரசுக்கட்சி இதற்கு எதிராகச் சட்டவிரோதப் போராட்டங்களை ஆரம்பித்து பின்னர் அது தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டமாவதற்கு வழிவகுத்தது. ஆனால். சோல்பரி அரசியல் சட்டத்தாலும் தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்பதையோ. அது அமுலில் இருந்த காலத்தில்தான் தமிழரசுக் கட்சி சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்தது என்பதையோ. தமிழ்தலைமைகள் ஒருபோதும் பேசுவதில்லை.

இதன் பின்னர். 1977இல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம். குடியரசு அரசியல் யாப்பை நீக்கிவிட்டு 1978இல் மீண்டுமொரு புதிய அரசியல் யாப்பை அறிமுகம் செய்தது. இந்த அரசியல் யாப்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை அறிமுகம் செய்து தனிமனித சர்வாதிகாரத்துக்கு வழிவகுத்ததுடன். பாராளுமன்ற ஜனநாயகத்தையும் குழிதோண்டிப் புதைத்தது. மிகக் கடுமையான ஒற்றையாட்சி முறையைக்கொண்ட இந்த அரசியல் அமைப்பால்தான் இனப் பிரச்சினை யுத்தமாக வடிவெடுத்தது. இந்த நிமிடம் வரை இந்த அரசியல் அமைப்புத்தான் நடைமுறையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சூழ்நிலையில்தான் தற்போதைய மேற்கத்தைய சார்பு அரசாங்கம் மீண்டுமொரு புதிய அரசியல் அமைப்பை வரைவதைப் பற்றிப் பேசி வருகிறது. புதிய அரசியல் அமைப்பின் நோக்கம் இந்த அரசாங்கத்தைப் பதவிக்குக் கொண்டு வந்த மேற்கத்தைய சார்புச் சக்திகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுதான் என்ற விமர்சனம் ஏற்கெனவே கிளம்பியுள்ள நிலைமை ஒருபுறமிருக்க. இந்த அரசியல் அமைப்பு என்ன உள்ளடக்கத்தைக்கொண்டு அமையப்போகிறது என்ற கேள்வியும் எழுந்து நிற்கிறது.

ஏனெனில். ஏற்கெனவே நடைமுறையில் உள்ள அரசியல் அமைப்பு சர்வாதிகாரத்தனமாக இருப்பதுடன். இனப் பிரச்சினையையும் சிக்கல்படுத்தி இருப்பதால். புதிய அரசியல் அமைப்பு இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமா? என்ற அவா மக்கள் மத்தியில் எழுவது இயல்பானது.

எனவே. புதிய அரசியல் அமைப்பு முக்கியமாக இரண்டு விடயங்களுக்குத் தீர்வு காண்பதாக அமையவேண்டும். ஒன்று. பூரணமான ஜனநாயக அரசியல் சூழலை புதிய அரசியல் அமைப்பு உருவாக்க வேண்டும். ஜனநாயகச் சூழல் எனும்போது. அரசியல் உரிமைகள். சம வாய்ப்பு. தனிமனித சுதந்திரம். சமூகப் பாதுகாப்பு. ஊடக சுதந்திரம். மனித உரிமைகள் பேணுதல். சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் எனப் பலவகைப்பட்டதாகும். இரண்டாவது. முன்னைய மூன்று அரசியல் அமைப்புகளாலும் தீர்க்கப்படாமல் புரையோடிப் போயிருக்கும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகும்.

ஆனால். 'யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே' என்பதைப்போல. தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள். இந்த அரசாங்கம் கொண்டுவரப்போகும் புதிய அரசியல் அமைப்பின் வெள்ளோட்டமாக அமைந்திருக்கிறது.

அதாவது. பதிய அரசியல் அமைப்பிலும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை முற்றாக நீக்கப்படமாட்டாது எனத் தெரிகிறது. தற்போதைய அரசியல் அமைப்பில் உள்ள ஒரேயொரு நல்ல அம்சமான சிறுபான்மை இனங்களுக்கும். சிறிய கட்சிகளுக்கும் அனுகூலமான விகிதாசார முறை நீக்கப்படும் சாத்தியமும் உள்ளது. இதுதவிர. தற்போதைய அரசாங்கம் எதிர்க்கட்சியினரைப் பழிவாங்கும் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் செய்து வருகின்றது. அதுமாத்திரமின்றி. ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியிலும் அரசாங்கம் இறங்கியுள்ளது. இதுபோன்ற பல ஜனநாயக விரோத நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருகின்றது.

இனப் பிரச்சினையைப் பொறுத்த வரையிலும். அரசாங்கமும் தமிழ் தலைமையும் சேர்ந்து குட்டையைக் குழப்பி வருகின்றன. இலங்கையை இரண்டாகப் பிரித்து. வடக்கு கிழக்குப் பகுதிக்கு சமஸ்டி வழங்கவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் நிர்வகிக்கப்படும் வட மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அந்தத் தீர்மானத்தின் உள்ளடக்கத்தை அரசாங்கத்தை ஆதரித்துக்கொண்டு. எதிர்க்கட்சியாகவும் இருக்கும் கூட்டமைப்புத் தலைமையும் ஆதரித்துள்ளது. சமஸ்டி என்ற சொல்லால் கடந்த காலத்தில் இலங்கையில் எழுந்த பாரதூரமான அரசியல் கொந்தளிப்பு நிலைமையை அறிந்திருந்தும். மீண்டுமொரு திட்டமிட்ட குழப்ப விளையாட்டில் தமிழ் தலைமை ஈடுபட்டுள்ளதையே இது உணர்த்துகிறது.

இப்படிச் சமஸ்டி கோருபவர்கள். 2000ஆம் ஆண்டில் சந்திரிக்கா குமாரதுங்க தலைமையிலான அப்போதைய அரசாங்கம் கொண்டு வந்த. ஏறக்குறைய சமஸ்டிக்கு ஒப்பான. வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் பேசும் பிரதேசங்களை உள்ளடக்கிய 'பிராந்தியங்களின் ஒன்றியம்' என்ற நல்லதொரு திட்டத்தை ஐ.தே.கவுடனும். ஏனைய சிங்கள இனவாதக் கட்சிகளுடனும் சேர்ந்து நிறைவேற்ற விடாது முறியடித்தது எதற்காக என்பதற்கு விளக்கம் சொல்லவேண்டும். தமிழ் தலைமையின் அந்த நடவடிக்கையை வைத்துப்பார்க்கும்போது. இப்பொழுது சமஸ்டி என்று கூக்குரல் இடுவது. இனப் பிரச்சினையைத் தீரவிடாமல் குட்டையை குழப்பி அரசியல் இலாபம் பெறுவதற்கே என்பது தெட்டத் தெளிவானது.

மறுபக்கத்தில். தமிழ் தலைமையின் கோரிக்கைக்கு மறுத்தான் அடிப்பதுபோல. பிரதமர் ரணில் விக்ரமசிங்க மிகவும் தெட்டத்தெளிவாக. "சமஸ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை" என ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வலியுறுத்திக் கூறியுள்ளார். அதேபோல. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இராணுவ வைபவம் ஒன்றில் உரையாற்றுகையில். "இலங்கையில் ஒற்றையாட்சி முறை இருப்பதே. நாட்டின் ஐக்கியத்துக்கும் ஒருமைப்பாட்டுக்கும் அவசியமானது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மறுபக்கத்தில். தென்னிலங்கையிலுள்ள ஏனைய அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில் கூட. இடதுசாரிக் கட்சிகளையும். ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினரையும் தவிர. இனப் பிரச்சினைக்குத் தீர்வாக ஒற்றையாட்சியை நீக்கிய அதிகாரப் பகிர்வுக்கு ஏனைய கட்சிகள் ஆதரவளிக்கத் தயார் இல்லை.

எனவே இந்த நிலைமையில். அமையப்போகும் புதிய அரசியல் அமைப்பில் சமஸ்டி வகையிலான அரசியல் தீர்வுக்கு இடம் இல்லை என்பது தெட்டத் தெளிவானது. இருந்தும். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன் - சுமந்திரன் அணியினர் இந்த அரசாங்க காலத்தில். அதுவும் இந்த வருடத்தில் இனப் பிரச்சினைக்கு நியாயமானதொரு தீர்வு காணப்படும் எனத் திரும்பத் திரும்பக் கூறி வருகின்றனர். என்ன முகாந்திரத்தை வைத்து இவர்கள் இப்படிக் கூறி வருகின்றனர் என்பது 'ஆண்டவனுக்குக்கூட' தெரியுமோ என்னவோ?

இந்தச் சூழ்நிலையில். ஜனாதிபதியும். பிரதமரும் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் பற்றுறுதியுடன் இருப்பதாகவும். அவர்கள் மீது நம்பிக்கை வைக்கவேண்டும் என்றும். அரசாங்கத்தை ஆதரித்துக் கொண்டிருக்கும் தமிழ் 'தலைமைகள் சொல்லுவது. மீண்டுமொருமுறை தமிழ்பேசும் மக்களை நம்பவைத்துக் கழுத்தறுக்கும் செயலே அன்றி வேறு எதுவுமல்ல.

எனவே. இந்த அரசாங்கம் கொண்டுவரப்போகும் புதிய அரசியல் அமைப்பு என்பது. நாட்டில் ஜனநாயக ஆட்சிமுறையை நிலைநாட்டுவதற்கோ அல்லது தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வ காண்பதற்காகவோ அல்ல என்பது தெளிவானது. அவர்கள் புதியதொரு மேற்கத்தையப் பாணியிலான அரசியல் அமைப்பைக் கொண்டுவர இருப்பதன் நோக்கம். நாட்டின் அரசியல். பொருளாதார. நிர்வாக. நிதிக் கட்டமைப்பு முறைமையை அந்நிய மற்றும் பிராந்திய வல்லாதிக்க சக்திகளின் நலன்களைப் பாதுகாப்பதற்கே தவிர வேறெதற்குமல்ல. இந்த விடயத்தில் தேவைக்கு அதிகமாக மாயை கொள்வது நமக்கு நாமே குழிதோண்டிக் கொள்வதாகத்தான் முடியும். அடிப்படை உண்மை என்னவெனில். நாட்டுக்கு எதிரான. அந்நிய சக்திகளுக்கு விசுவாசமான ஒரு அரசால். நமது நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு ஏற்ற அரசியல் அமைப்பை வரைய முடியாது என்பதே. இதை உணராமல். பல நல்லெண்ணம் கொண்டவர்கள் கூட. இந்த அரசியல் அமைப்பால் ஏதோ மந்திர தந்திரங்கள் நிகழப்போகிறது என நினைத்து. தமது நேரத்தை வீணாக்கி ஆலோசனைகளை முன்வைத்து வருகின்றனர். அவர்களுக்கு எஞ்சப்போவது ஏமாற்றமே தவிர வேறெதுவுமல்ல.

முதலில் செய்ய வேண்டியது. நாட்டில் உண்மையான மக்கள் நலன்காக்கும் அரசொன்றைப் பதவிக்குக்கொண்டு வருவதே. அதன் பின்னர் நாட்டு மக்கள் அனைவரதும் ஆலோசனைகளுடன் புதிய அரசியல் அமைப்பொன்றை வரைவதே சாலப் பொருத்தமாக இருக்கும். எங்களுக்குத் தேவை முற்றுமுழுதான ஜனநாயக ரீதியிலான புதிய அரசியலமைப்பே தவிர. புதிய வடிவத்தில் இன்னொரு 1978இன் அரசியல் அமைப்பல்ல. இதில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்.

நெற்றிப்பொறியன்

# தமிழரசுக் கட்சியின் பிரச்சாரப் பொம்மைகளாக ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். – கட்சியைப் பதிவு செய்வது எப்போது?



தமிழீழ விடுதலைப்புலிகளுடைய ஆயுதப்போராட்டம் முடிவடைந்து ஏழாண்டுகளைக் கடக்க இருக்கும் நிலையில் இதுவரையிலும் இக்கட்சிகள் தனிப்பெரும் பலத்தை மக்கள் மத்தியில் காண்பிக்கவில்லை. தேர்தல் காலங்கள் வருகின்றபொழுது கூட்டமைப்பின் ஒற்றுமையைச் சீர்குலைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்படுகின்றது என்று சம்பந்தன் தலைமை கூறுகின்றபொழுது அதனை ஏற்றுக் கொள்ளும் இவ் ஆயுதக்கட்சிகளின் தலைவர்கள் ஆமோதித்து நிபந்தனைகள் சிலவற்றை முன்வைத்து மீண்டும் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இத்தேர்தல் பிரச்சாரங்களின் பொழுது இவ் ஆயுதக்கட்சிகள் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து பிரச்சாரங்களில் ஈடுபடுகின்றனர். இதனால் தமிழரசுக் கட்சிக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரித்து வருகின்றது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பதிவுசெய்ய வேண்டும் என்று ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் சுரேஸ் பிரமேச்சந்திரன் எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தது. இதற்குக் காரணம் ரெலோ, புளொட் போன்ற கட்சிகள் ஆதரவினை வழங்காமையே. செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் என்போரின் அசமந்தப்போக்கே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்படாமைக்கான காரணமாகும்.

அதுமட்டுமன்றி தமிழரசுக் கட்சியில் இருக்கக்கூடிய உயர்மட்டக் குழுக்களின் நிலைப்பாடு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்யக்கூடாது என்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டால் அதில் சாதக பாதக விளைவுகள் இருக்கின்றன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையுடன் தமிழரசுக்கட்சியின் ஆதரவின்றி தேர்தல் களத்தில் ஆயுதக் கட்சிகள் இறங்குமாக இருந்தால் மக்கள் மத்தியில் அவர்களுக்கு ஆதரவு அற்றுப்போகும் என்ற பயம் இருக்கின்றது. அதேநேரம் தமிழரசுக்கட்சி ஆயுதக்கட்சிகளை ஓரங்கட்டி தாம் தனித்து போட்டியிடுவார்களாக இருந்தால் தாமும் தோல்வியைச் சந்திக்க நேரிடும் என்பதே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்படாமைக்கு மிக முக்கிய காரணமாக இருக்கின்றது.

ஒருவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டாலும் செல்வம் அடைக்கலநாதன் அதற்கு ஒத்துவரமாட்டார். ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தற்பொழுது ரெலோ, புளொட், ஈ.பி. ஆர்.எல்.எப் போன்ற கட்சிகளுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கின்றது. தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் இக்கட்சிகளை தனியே போட்டியிடவைத்து அதில் வெற்றி பெறுபவர்களை தம்மோடு இணைத்துச் செயற்படுவதே அவர்களின் திட்டமாகும். தமிழரசுக் கட்சியின் பிடியிருந்து இக்கட்சிகள் தாமாகவே வெளியேறி ஒரு தேர்தலைச் சந்திப்பார்களா? என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் ஆயுதக் கட்சிகளைத் தவிர்த்து போட்டியிடுமாக இருந்தால் 17 ஆசனங்களைக் கைப்பற்ற முடியாது. தனித்துப் போட்டியிட்டு இவ்ஆயுதக் கட்சிகள் வெற்றிபெறுவார்களாக இருந்தால் பாராளுமன்றத்தில் இவர்களுடைய பலம் மேலோங்கிக் காணப்படும்.

இதன் அடுத்த கட்டமாக அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டு மக்களுக்குச் சேவையாற்றும் வாய்ப்பைப் பெறுவர். மூன்று தசாப்த காலங்களாக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அதனைத் தக்கவைத்துக்கொண்டு வருகின்றார். ஈ.பி.டி.பி கட்சியினால் தேர்தல்களில் வெற்றிபெறமுடியுமாக இருந்தால், விடுதலைப்புலிகள் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்த ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சிகளுக்கு ஏன் ஆசனங்களைப் பெற்றுக்கொள்ள முடியாது. கட்சிப் பதிவு விடயத்தில் தமிழரசுக் கட்சி இரட்டை வேடம் போடுகின்றது. ஆயுதக் கட்சிகள் எம்மோடு இணைந்து போட்டியிட்டால் என்ன? போட்டியிடாமல் விட்டால் என்ன? என்பது இவர்களின் நிலைப்பாடு. தமிழரசுக் கட்சியினைவிட இவ் ஆயுதக்கட்சிகளுக்கே இந்நாட்டின் உரிமைக்காக குரல் கொடுக்கத் தகுதி இருக்கின்றது. இத் தகுதியை உரியமுறையில் பயன்படுத்த முடியாததற்கு காரணம் தமிழரசுக் கட்சியை எதிர்த்துக்கொண்டு இவ் ஆயுதக்கட்சிகள் தேர்தலில் போட்டியிடுமாக இருந்தால் தமிழரசுக் கட்சியின் பிரச்சாரம், தமிழினத்தின் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்த துரோகிகள் இவர்கள் என்று மேடை மேடையாக முழங்குவார்கள். இதனால் இவ் ஆயுதக் கட்சிகள் பலவீனம் அடைவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றது. பொதுவாக தமிழரசுக் கட்சி இவ் அயுதக் கட்சிகளைத் தனித்துப் போட்டியிடுங்கள் என்று கூறினாலும், அவர்கள் கூட்டமைப்பிலிருந்து பிரிந்துசென்று போட்டியிட முன்வர மாட்டார்கள். அவ்வாறு நடக்குமாக இருந்தால் உண்மையில் இவ் விடயம் வரவேற்கத்தக்கது. தமிழரசுக் கட்சியை இவ் ஆயுதக் கட்சிகள் கைக்கூலிகளாக வைத்திருக்கவேண்டும். தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் பங்களிக்காத இவர்களை மக்கள் பிரதிநிதிகள் என்று மகுடம் சூட்டி இன்று ஆசனத்தில் அமரவைத்திருப்பதற்கு இவ் ஆயுதக்கட்சிகளும் காரணமே.

தமிழரசுக் கட்சியினுடைய செயற்பாடுகள் அண்மைக்காலமாக தமது தனித்துவம் கருதியதாகவே அமையப்பெற்றுள்ளது. 2017க்குப் பின்னர் நடைபெறவிருக்கின்ற மாகாணசபைத் தேர்தலிலாவது இவ் ஆயுதக் கட்சிகள் தனித்துப் போட்டியிடுவார்களா? அல்லது தமிழரசுக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவார்களா? என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் இன்னமும் இருக்கின்றது. பதவி மோகங்களைக்கொண்டு இவ் ஆயுதக் கட்சிகளை விலைக்கு வாங்கலாம் என்று தமிழரசுக் கட்சி தவறான அபிப்பிராயம் கொண்டு இருக்கின்றது.

ரெலோ, புளொட், ஈ.பி.ஆர். எல்.எப். விடுதலைப்புலிகள் ஒரே கொள்கையோடு இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்னர் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள். இவர்களின் பிளவுக்கு இந்தியாவே காரணம். இதனாலேயே சகோதரப் படுகொலைகள் தாறுமாறாக இடம்பெற்றது. தமிழனை சிங்களவர்கள் வென்ற வரலாறு இல்லை. உலக நாடுகளின் உதவிகளுடனேயே தமிழர் போராட்டம் மௌனிக்கப்பட்டது. தமிழரசுக் கட்சியானது தனது சர்வாதிகாரத்தை சம்பந்தன் தலைமையில் நெறிப்படுத்தி வருகின்றது. இதற்கு இவ் ஆயுதக்கட்சிகள் முற்றுப்புள்ளியை வைக்காவிட்டால் தமிழரசுக் கட்சியிடம் கையேந்தி வாழ்வதைவிட வேறு வழியில்லை. முன்னாள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்கள் கட்சியின் ஒற்றுமைக்காகவும், கட்சியைப் பதிவுசெய்யவேண்டும் என்பதிலும் முழுமூச்சாகச் செயற்பட்டார். அதன் விளைவு கடந்த வருட பாராளுமன்றத் தேர்தலில் திட்டமிட்டு தமிழரசுக் கட்சியினால் ஓரங்கட்டப்பட்டார். இவ்விடயம் யாவரும் அறிந்ததே.

தேசியப் பட்டியலில் வந்த சுமந்திரன் அவர்கள் தேர்தலில் களமிறக்கப்பட்டு வெற்றியும் பெற்றார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளராக சுரேஸ் பிரேமச்சந்திரன் கடமையாற்றிய காலகட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பற்றி தவறாகக் கூறவில்லை. அதன் ஊடகப் பேச்சாளராக தனது கடமையை திறன்படச் செயற்படுத்தி வந்தார். எனினும் அவரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து ஓரங்கட்டுவதற்கு அக்காலகட்டத்தில் ஐ.தே.கவுடன் இணைந்து சுமந்திரன் செயற்பட்டார் என்பது தகவல். தமிழினத்தின் தேசியம், சுயநிர்ணயம் என்று போராட ஆரம்பித்த இந்த ஆயுதக்கட்சிகள் இன்று தமிழரசுக் கட்சியிடம் கையேந்தி நிற்பது உகந்ததல்ல. தமிழரசுக் கட்சியுடன் இவ் ஆயுதக்கட்சிகள் இருக்கும் வரை தமிழரசுக் கட்சி தன்னைப் பலப்படுத்திக் கொண்டேசெல்லும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. எதிர்வரும் தேர்தல்களிலாவது இவ் ஆயுதக்கட்சிகள் தனித்துப் போட்டியிட்டு வெற்றிபெற்று தமிழரசுக் கட்சியைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக பதிவு செய்ய வாருங்கள் என்று அழைக்கவேண்டும். அவ்வாறு செயற்பட்டால் தான் எம்மைவிட்டால் இவ் ஆயுதக்கட்சிக்கு வழியில்லை என்று சொன்ன தமிழரசுக் கட்சியின் வாய்க்குப் பூட்டுப் போடமுடியும். இந்த நிலைமை மாற்றம் பெறும்வரை அரசாங்கமும் எம் தமிழ் அரசியல்வாதிகளை கைப் பொம்மைகளாகவே பயன்படுத்தி வருவார்கள்.

விடுதலைப்புலிகளுடைய செயற்பாடுகள் தற்பொழுது ஆயுத ரீதியாக எமது நாட்டில் இல்லை. மூன்று கட்சிகளும் இணைந்து ஏன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாகப் பதிவு செய்யத் தயங்கவேண்டும். இந்த மாயத் தோற்றத்திலிருந்து முதலில் வெளியில் வாருங்கள். அப்பொழுது உங்களுடைய அரசியல் ஒளிமயமாக அமையும் என்பதே இன்றைய அரசியலின் நிலைப்பாடும் கூட. இல்லையேல் தமிழரசுக் கட்சி இவ் ஆயுதக் கட்சிகளை மேலோங்கவிடாது. தமது கட்சியின் கீழ் வாழையடி வாழையாக வைத்துக்கொள்ளும். தமிழரசுக் கட்சிக்கு பாடம் புகட்டும் செயற்பாடுகளை எதிர்வரும் காலங்களிலாவது இவ் ஆயுதக்கட்சிகள் செயற்படுத்துவார்களாக இருந்தால் மகத்தான வெற்றிபெற்று தமிழ் மக்களுக்கான சேவையினை இவ் ஆயுதக்கட்சிகள் செய்யமுடியும். இல்லையேல் காலப்போக்கில் இவ்கட்சிகள் அரசியலில் இருந்து ஓரங்கட்டப்பட்டு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று இவ் நாட்டில் இருக்கும் சூழ்நிலை உருவாகும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பல ஆண்டுகளுக்குப் பின்பு எதிர்க்கட்சியாக வருமென்று யார் எதிர்பார்த்தார். ஆகவே இனி இந்த நாட்டில் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியுமே இருக்கவேண்டிய சூழ்நிலை உருவாகும். முஸ்லிம்கள் காலத்துக்குக்காலம் மாறிக்கொள்வார்கள். தன்மானத்தோடு தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடப்புறப்பட்ட இவ் ஆயுதக் கட்சிகளுக்கே தமிழ் மக்களுடைய வேதனை புரியும். கடந்தகால கசப்பான உணர்வுகளை ஒருபுறம் வைத்துவிட்டு, தமிழ் மக்களின் உணர்வுகளை மதித்து, தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாகப் பதிவுசெய்து, தமிழ் மக்களுக்கான சேவைகளைச் செய்ய முன்வாருங்கள். இல்லையேல் தமிழரசுக் கட்சியின் பிரச்சாரப் பொம்மைகளாகவும், அவர்களின் அடிவருடிகளாகவும் தொடர்ந்து செயற்பட நேரிடும். இதனைத் தவிர்த்துக் கொள்வதே ஆயுதக் கட்சியினருக்குச் சிறந்தது.

– சுழியோடி –

# மனித உரிமை மீறல் மற்றும் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணை அவசியம்

இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல் மற்றும் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணை அவசியம் என்பது தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

ஆனாலும் அரசாங்கமானது இந்த விடயத்தில் மாற்று நிலைப்பாட்டை கொண்டுள்ளதாகவே தெரிகின்றது. இதனால் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக்குற்றங்கள் தொடர்பான விசாரணை தொடர்பில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழக்கும் நிலை உருவாகிவருகின்றது.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இந்த யுத்தத்தின்போதும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் படுகாயமடைந்தனர். ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயினர். வடக்கு கிழக்கில் 90 ஆயிரம் பேர் விதவைகளாக்கப்பட்டனர். 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் அநாதரவாகினர். இவ்வாறு பெரும் இழப்புக்களை ஏற்படுத்திய யுத்தத்தின்போது மனித உரிமை மீறல்களும் யுத்தக் குற்றங்களும் இடம்பெற்றன என்பதை சகல தரப்பினருமே ஏற்றுக்கொள்கின்றனர்.

இந்த நிலையில்தான் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்ற ஐ.நா மனித உரிமைப் பேரவை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் முதலாவது பிரேரணை கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்படவேண்டுமென்று இந்தப் பிரேரணை மூலம் வலியுறுத்தப்பட்டது. 2013ஆம் ஆண்டு, 2014ஆம் ஆண்டு என தொடர்ச்சியாக இலங்கைக்கு எதிரான பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. இதனையடுத்து ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணை இடம்பெற்றது.

இந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதையடுத்து 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவில் புதிய ஆட்சிக்கு கால அவகாசம் வழங்கப்பட்டது. இதனையடுத்து அந்த வருடம் செப்டெம்பர் மாதம் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவில் உள்ளக விசாரணையினை நடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் இணங்கியிருந்தது. சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கி இந்த உள்ளக விசாரணை நடத்தப்படவேண்டுமென்று பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்திற்கு இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியதுடன் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் இணக்கம் தெரிவித்திருந்தது.

இவ்வாறு சர்வதேச நீதிபதிகளின் ஒத்துழைப்புடன் உள்ளக விசாரணையினை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் இணங்கியபோதிலும் அதற்கான நடவடிக்கைகள் இன்னமும் எடுக்கப்படவில்லை. தற்போது உள்ளக விசாரணைப் பொறிமுறைக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான விடயத்தில் காலதாமதம் காண்பிக்கப்பட்டு வருகின்றது.



ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவில் சர்வதேச நீதிபதிகளுடனான உள்ளக விசாரணைக்கு இலங்கை அரசாங்கம் இணங்கியபோதிலும் இத்தகைய சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணைக்கு ஒருபோதும் இடமில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், அமைச்சர்களும் அடிக்கடி கூறிவருகின்றனர். அரசாங்கத்தின் தலைவராகிய ஜனாதிபதியே சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பு ஒருபோதும் சாத்தியமில்லையென்று தெரிவித்திருக்கும் நிலையில் விசாரணையின் போக்கு எவ்வாறு அமையும் என்ற கேள்விக்குறியே தற்போது எழுந்திருக்கின்றது.

கடந்த ஜூன் மாதம் ஐ.நா மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடரின் போது வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இலங்கை நிலைவரம் தொடர்பில் கூட்டமொன்றை நடத்தியிருந்தார். இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட புலம்பெயர்ந்த தமிழ் அமைப்பினர் சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்புகளுடனான விசாரணை தொடர்பில் கேள்விகளை எழுப்பினர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சர்வதேச நீதிபதிகளுக்கு இடமில்லை என்று கூறிவருகின்ற நிலையில் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று இவர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர். இதற்குப் பதிலளித்திருந்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அது ஜனாதிபதியின் தனிப்பட்ட கருத்து என்றும் இவ்விடயம் தொடர்பில் இன்னமும் உறுதியான முடிவு எடுக்கப்படவில்லையென்றும் கூறியிருந்தார்.

இவ்வாறு சர்வதேச தலையீட்டுடனான நீதியான விசாரணை தொடர்பில் குழப்பமான நிலையே தற்போதும் காணப்பட்டு வருகின்றது. இத்தகைய சூழ்நிலையில் பிரித்தானிய நாட்டின் பாலியல் வன்முறைகள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் பரனஸ் அனலி இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். ஐ.நா மனித உரிமைப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் நடைமுறை விடயம் தொடர்பில் ஆராயும் வகையிலேயே அவரது இந்த விஜயம் அமைந்திருக்கின்றது.

இலங்கை வந்த இவர் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான மாகாண அமைச்சர்கள் குழுவினரை யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேசினார். எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பினரையும் இவர் சந்தித்துப் பேசினார்.

பிரித்தானிய அமைச்சருடனான சந்திப்பின்போது சர்வதேச தலையீட்டுடனான விசாரணையின் அவசியம் குறித்து வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் விளக்கிக் கூறியிருக்கின்றார். இலங்கை அரசாங்கம் இன்று வரைக்கும் போர்க்குற்ற விசாரணையில் சர்வதேச நாடுகளின் தலையீட்டை அங்கீகரிக்கவில்லை. அத்துடன் அத்தகைய சர்வதேச நாடுகளின் தலையீட்டை அவர்கள் விரும்பவில்லை. இதனாலேயே நாங்கள் கடந்த வருடம் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு இந்த விடயம் தொடர்பில் தெரிவித்திருந்தோம். போர்க்குற்றங்களுக்கு தண்டனை வழங்கக்கூடிய சட்டம் உலகில் பல நாடுகளில் நடைமுறையில் உள்ளபோதும், இலங்கை அரசாங்கம் அதனை உருவாக்குவதற்கு ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று முதலமைச்சர் பிரித்தானிய அமைச்சரிடம் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

சர்வதேச நாடுகளின் தலையீட்டுடன் போர்க்குற்ற விசாரணை நடத்தப்படாவிட்டால் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கப்போவதில்லை. சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய சர்வதேச விசாரணைகளை அரசாங்கம் விரும்பவில்லை அதனை அங்கீகரிக்கவுமில்லை. எனவே சர்வதேச தலையீடு இல்லையேல் எமக்கு நீதியும் கிடைக்கப்போவதில்லை என்றும் முதலமைச்சர் இந்த சந்திப்பில் எடுத்துக்கூறியுள்ளார்.

இதேபோல் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பினருடனான சந்திப்பின்போதும் நீதியான விசாரணை நடத்துவதற்கு பிரித்தானியாவின் பங்களிப்பு முக்கியமானது என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு சர்வதேச பங்களிப்புடனான விசாரணையை தமிழ் தரப்பினர் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்ற போதிலும் அந்த விடயத்தில் அரசாங்கமானது அக்கறை காட்டுவதாக தெரியவில்லை.

ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவில் சர்வதேச விசாரணையின் அவசியம் பல தடவைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. தற்போது இலங்கையில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டதையடுத்து சர்வதேச நீதிபதிகளின் ஒத்துழைப்புடனான சர்வதேச விசாரணைக்கு சர்வதேச நாடுகள் சம்மதம் தெரிவித்திருந்தன. ஆனால் இந்த விசாரணைப் பொறிமுறை அமைக்கப்படுமென்று உறுதியளித்த அரசாங்கமானது தற்போது அந்த நிலைப்பாட்டிலிருந்து மாறி வருவது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஒரு ஏமாற்றுச் செயற்பாடாகவே அமைந்திருக்கின்றது.

தற்போதைய நிலையில் சர்வதேச நீதிபதிகளுடனான உள்ளக விசாரணைப் பொறிமுறை அமைக்கப்படவேண்டுமானால் அதற்கு சர்வதேச நாடுகளின் அழுத்தம் என்பது முக்கியமானதாகும். எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தொடரின் போது இலங்கை அரசாங்கமானது விசாரணைப் பொறிமுறை தொடர்பில் விளக்கம் அளிக்கவேண்டியுள்ளது. எனவே அதற்கு முன்னர் விசாரணைப் பொறிமுறையின் நம்பகத்தன்மையை புலப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாக உள்ளது.

எனவே மனித உரிமை பேரவையில் இணங்கிக்கொண்டதற்கு இணங்க சர்வதேச ஒத்துழைப்புடன் விசாரணைப் பொறிமுறையினை முன்கொண்டு செல்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

இலங்கைப் படையினரால் இறுதி மூன்று மாதங்களில் நடத்தப்பட்ட பெரும் இனப்படுகொலையின் போது 53ஆயிரத்து 215 தமிழ் மக்கள் கொல்லப்பட்டுவிட்டனர்.

பிரிட்டிஷ் தமிழர் பேரவை நடத்திய ஆய்வுகளின் அடிப்படையிலும் திரட்டப்பட்ட நம்பகமான தகவல்களின் அடிப்படையிலும் அரசு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரபூர்வ வெளியீடுகளின் அடிப்படையிலும் இந்த செய்தியை பேரவை வெளியிட்டுள்ளது.

வன்னிமண்ணில்3லட்சத்து30 ஆயிரம் மக்கள் வாழ்ந்ததை ராஜபக்ஷவின் முந்தைய அறிக்கைகளும் அந்தப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களின் அறிக்கைகளும் உறுதி செய்கின்றன.

ஆனால், அகதி முகாம்களில் 2 லட்சத்து 76 ஆயிரத்து 785 மக்கள்தான் எஞ்சியிருந்ததாக ஐ.நா சபை கூறுகின்றது. இந்த அடிப்படையில் பார்த்தால் எவ்வளவு பெரிய இனப்படுகொலை நடந்துள்ளது என்பதை எளிதில் அறிய முடியும்.

அரசின் வதை முகாம்களுக்கு வந்த அப்பாவி மக்களில் 13 ஆயிரத்து 130பேர் காணாமல் போயுள்ளனர். இதை ஐ.நா சபையும் உறுதி செய்துள்ளது.

இந்த தகவல்களின் அடிப்படையில் 53ஆயிரத்து 215 பேரை மார்ச் மாதம் முதல் மே மாதம் வரையிலான ஒரு குறுகிய காலப்பகுதியில் நாங்கள் இழந்து நிற்கின்றோம்.

காணாமல் போய்விட்டதாக கூறப்படும் 13ஆயிரத்து 130 அப்பாவி தமிழ் மக்களையும் மீட்க அரசும் உலக சமுதாயமும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

முள்வேலியின் பின்னால் அடைபட்டுக் கிடந்த எங்களது மக்களுக்குத் தேவையான சகலவற்றையும் பொறுப்பேற்பது தமிழர் அனைவரின் தலையாய கடமையாகும்.

– மறவன் –

# பிராந்தியச் செய்திகள்



## மாவிடிக்கும் இயந்திரம் கண்டுபிடித்த மாணவிக்கு வெள்ளிப் பதக்கம்

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தினால் நடத்தப்பட்ட அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான புத்தாக்கப் போட்டியிலே கடந்த 16 அன்று தேசிய மட்டத்தில் மட்டக்களப்பு-கல்குடா கல்வி வலயத்தைச் சேர்ந்த செங்கலடி விவேகானந்தா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவி வெள்ளிப் பதக்கத்தை பெற்றுக்கொண்டார். கொழும்பு பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியின் போது தரம் 06இல் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் புவனேசராசா நகுமி என்ற மாணவியினது மாவிடிக்கும் இயந்திரம் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது.

வெள்ளிப் பதக்கத்தைப் பெற்ற இம்மாணவியை வித்தியாலய அதிபர் க.சிவலிங்கர்ராஜா வாழ்த்தியதோடு அம்மாணவியை தயார்ப்படுத்திய ஆசிரியை தயாமதி பிரேம்குமாருக்குப் பாராட்டுக்களையும் தெரிவித்தார். பாடசாலை ரீதியாக விண்ணப்பித்ததன் அடிப்படையில் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவான குறித்த மாணவி இறுதிப் போட்டியில் இந்த வெற்றியைப் பெற்றுள்ளார். அத்துடன் கடந்த வருடம் நடைபெற்ற புத்தாக்க போட்டியிலும் இப்பாடசாலையின் தரம் 9இல் கல்வி கற்ற மாணவன் ஜீவரெத்தினம் பிரதீபன் நீருற்றும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தமைக்காக தேசிய மட்டத்தில் 5ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சட்ட விரோதமாக இரத்தினக்கல் அகழ்ந்தவர் கைது

*களனி கங்கையில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபரின் செயற்பாடுகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து. கிரிந்தவல பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.*



*குறித்த நபர் மேலதிக விசாரணைகளுக்காக இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.*



## மட்டக்களப்பில் வெகு சிறப்பாக நடைபெற்ற கலைவிழா

மட்டக்களப்பு - கிரான் றெஜி கலாச்சார மண்டபத்தில் கடந்த (16) அன்று கலை விழாவும் பிரிவுபசார வைபவமும் வெகு சிறப்பாக இடம்பெற்றுள்ளது. குறித்த நிகழ்வு முன்பள்ளி பொறுப்பாசிரியை ஆர்.வசுமதி தலைமையில் கிரான் அன்னை ஸ்ரீ சாரதா தேவி ஆங்கில முன்பள்ளி ஆசிரியைகளின் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளது. இந்த வைபவத்தில் இம்முறை புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு அதிகமான புள்ளிகளைப்பெற்ற மாணவர்களுக்கு கௌரவிப்பு நிகழ்வும் விருது வழங்கலும் நடாத்தப்பட்டுள்ளது.

அத்துடன் அடுத்த ஆண்டின் பாடசாலைக்கு முதலாம் தரத்திற்கு சேர்க்கப்படவுள்ள மாணவர்களுக்கான பிரிவுபசார வைபவமும் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன்போது பல கலை நிகழ்வுகளும் நடாத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக கல்குடா கல்வி வலய பணிப்பாளர் எஸ்.ஸ்ரீகிருஷ்ணராஜா. பிரதி கல்வி பணிப்பாளர் தினகரன் ரவி. இந்துசமய வளர்ச்சி மன்றத் தலைவர் ரி.கலைவாணன். ஓய்வுபெற்ற அதிபர்கள். மதகுருமார்கள். பெற்றோர்கள். மாணவர்கள். பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பூமலர்ந்தான் குளத்தில் 50,000 மீன்குஞ்சுகள்

வடக்கு மாகாணத்தில் உள்ள நன்னீர் மீன்பிடி சங்கங்களை வாழ்வாதாரத்தில் ஊக்குவிக்கும் திட்டத்திற்கு அமைவாக, ஏற்கனவே மாகாணத்தில் உள்ள பல நன்னீர் மீன்பிடி சங்கங்களுக்கு அவர்களது குளங்களில் நன்னீர் மீன்குஞ்சுகளை வைப்பிலிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளமை யாவரும் அறிந்ததே. அதனடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள மடு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மீள்குடியேற்றம் செய்யப்பட்ட புதிய கிராமமாகிய பூமலர்ந்தானில் உள்ள கிராம மக்களை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடி, அவர்களது தேவைகள் தொடர்பாக விசேடமாக கலந்தாலோசித்ததுடன் அங்குள்ள மக்களது வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் முகமாக பூமலர்ந்தான் குளத்தில் 50,000 மீன்குஞ்சுகளை வைப்பிலிடும் நிகழ்வு கடந்த 16-12-2016 அன்று மதியம் 12:30 மணியளவில் நடைபெற்றது.

வடமாகாண மீன்பிடி அமைச்சின் 2016ம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியிலிருந்து (PSDG) ரூபா ஒரு இலட்சம் பெறுமதியான 50,000 மீன்குஞ்சுகள் கொள்வனவு செய்யப்பட்டு குறித்த குளத்தில் வைப்பிலிடப்பட்டுள்ளது. குறித்த நிகழ்வில் மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ்வரன் அவர்களும், மடு பிரதேச செயலாளர் எப்.சி.சத்தியசோதி, இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மன்னார், வவுனியா மாவட்ட பொறுப்பதிகாரி பா.நிருபராஜ், மன்னார் மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.மைக்கல் கொலின், பூமலர்ந்தான் கிராமசேவகர், குறித்த பகுதி கிராம மட்ட அமைப்புக்களின் உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்தனர்.



## மன்னாரில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள பிரதேசங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி வி.ஆர்.சி.லெம்பேட் தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில், மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதிக்குள் 138 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த நான்கு மாத காலப்பகுதிக்குள் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 59 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். இவர்களில் அதிகமான டெங்கு நோயாளர்கள் பேசாலை, தாழ்வுபாடு, சாவற்கட்டு போன்ற கிராமங்களில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். அனைவரும் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிறந்த முறையில் இவர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டு நல்ல நிலையில் வீடு திரும்பியுள்ளனர். மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தொடர்ச்சியாக டெங்கு காய்ச்சல் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். ஆனால் நாங்கள் எதிர்பார்த்த பலன் கூடுதலாக



கிடைக்கவில்லை.

இதற்கு காரணம் மக்களின் பூரண ஒத்துழைப்பு இன்மையே. மக்களுக்கு டெங்கு நுளம்பின் உற்பத்தி மற்றும் நுளம்பு உற்பத்தியாகின்ற இடங்களை அடையாளம் காணுதல் போன்றவை தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது. குறித்த பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் வகையில் கிராம மட்டத்தில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். மிக குறுகிய காலத்தில் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நுளம்பின் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவோம். மேலும் எமது பிரிவில் டெங்கு நுளம்பு உற்பத்திக்கு காரணமாக தமது சூழலை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் பலருக்கு எதிராக மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது என மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி வி.ஆர்.சி.லெம்பேட் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உரமானிய கொடுப்பனவுகளை வங்கிகளில் பெறலாம் – ஆர்.விஜயகுமார்

தற்போது செய்கை பண்ணப்பட்டுள்ள நெற்பயிர் செய்கைக்கான உரமானிய கொடுப்பனவுகளை விவசாயிகள் தாங்கள் சமர்ப்பித்த வங்கிக்கணக்கில் பெற்றுக் கொள்ளமுடியும் என மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.விஜயகுமார் தெரிவித்துள்ளார். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளரான ஆர்.விஜயகுமார். ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், வவுனியா மாவட்டத்தில் 45 ஆயிரத்து 683 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணுவதற்காக 17 ஆயிரத்து551 விவசாயிகள் கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவு செய்திருந்தனர். இவர்களுக்கான உரக்கொடுப்பனவுக்காக ஏக்கர் ஒன்றுக்கு ஐந்தாயிரம் ரூபாய் வீதம் 226.8 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அக்கொடுப்பனவுக்கான வேலைகள் எமது திணைக்களத்தில் நிறைவு செய்யப்பட்டு மத்திய விவசாய அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கான உரமானியக் கொடுப்பனவுகள் அவர்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் அவற்றைப்பெற முடியும்.

இதேவேளை, முதல் கட்டமாக உரமானியக் கொடுப்பனவுகள் வடக்கில் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கில் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்குரிய விவசாயிகளின் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. ஏனைய மாவட்ட உரமானியக் கொடுப்பனவுகளுக்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றன எனத் தெரிவித்தார்.



## சமூகத்துடன் இணைந்த முன்னாள் போராளிகளுக்கு உதவிகள் வழங்கி வைப்பு

வவுனியா புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வுபெற்று சமூகத்துடன் இணைந்து கொண்ட முன்னாள் போராளிகளுக்கு கடந்த (16) அன்று வவுனியா நகரசபை மைதானத்தில் சுய தொழில்களுக்கான உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு. மீள்குடியேற்றம். புனர் நிர்மாணம் மற்றும் புனர்வாழ்வு காரியாலயம் மூலமாக வவுனியா. மன்னார். கிளிநொச்சி. முல்லைத்தீவு. யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த முன்னாள் போராளிகளுக்கான தையல் இயந்திரங்கள். கோழிக் குஞ்சுகள் சுய தொழிலுக்காக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் போது மூன்று முன்னாள் போராளிகளான ஒரு வருட புனர்வாழ்வுப் பயிற்சிபெற்ற மட்டக்களப்பைச் சேர்ந்த செல்லப்பா சிவநாதன்(43). அம்பாறையைச் சேர்ந்த தியாகராசா முரளிதரன்(31) மற்றும் வாழைச்சேனையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அமரசிங்கம்(38) ஆகியோர் சமூகத்துடன் இணைத்து வைக்கப்பட்டனர். இந்து மத அலுவல்கள் அமைச்சின் அனுசரணையின் கீழ் புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைந்து கொண்டவர்களுக்கிடையிலான வவுனியா. மன்னார் மாவட்டக் கழகங்களுக்கிடையிலான நட்புறவினை மேம்படுத்தும் வகையில் காற்பந்தாட்ட இறுதிப் போட்டியும் இடம்பெற்றது. மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனின் ஆலோசனைகளுக்கு அமைவாக புனர்வாழ்வுப் பணியகப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஜானக ரத்நாயகா. பிரிகேடியர் யூ.எஸ்.பீ.தர்சனலியனகே. சிறப்பு விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.பி.றோஹண புஸ்பகுமார ஆகியோர் கலந்துகொண்டனர்.








## திரிஷாவுக்கு தொடரும் பாராட்டு

நடிகை திரிஷா பல சோதனைகளை தாண்டி இன்று சினிமாவில் முன்னணி நடிகையாக இருப்பவர். நடிகை நயன்தாரா வந்தபோது இவரும் வந்தவர். போட்டி நடிகை யாக சொல்லப்பட்டதும் இருவருமே நல்ல நண்பர்கள். சொந்த வாழ்க்கையை விட சினிமாவிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் திரிஷா தன்னுடைய சினிமா வாழ்வை இன்றோடு 14 வருடங்கள் கடந்துவிட்டார். 5 மொழிகளில், 60 படங்கள் நடித்தவர். 26 விருதுகளை வாங்கியுள்ளார். அவருக்கு



#14YearsofTrishaism என டேக் செய்து கொண்டாடிவருகிறார்கள். பலரும் பாராட்டுகளைத் திரிஷாவுக்கு தெரிவித்து வருகிறார்கள்.



## சசிகலாவின் வாழ்க்கையை படமாக்கும் இயக்குனர்

இந்தியளவில் மிகப்பிரபலமான இயக்குனர் ராம் கோபால் வர்மா. இவர் எடுக்கும் படங்களுக்கு பிரபலமானதை விட சில சர்ச்சையான பதிவுகளை ட்விட்டரில் போட்டு பிரபலமானது தான் ஆகும். இந்நிலையில் தற்போது மீண்டும் ஒரு சர்ச்சையான விஷ யத்தை பதிவு செய்துள்ளார் ராம் கோபால் வர்மா. அதாவது தனது அடுத்த படத்தின் பெயர் சசிகலா என்றும் இது அரசியல் சம்பந்தப்பட்ட கற்பனை கதை எனவும் போட்டுள்ளார்.

தற்போது தான் தமிழகம் சோகத்திலிருந்து மீண்டுவரும் நிலையில் சசிகலா தான் அடுத்த சின்னம்மா என்று அதிமுகவில் உள்ள சில அமைச்சர்கள் சொல்ல மக்களிடையே மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது இந்த விஷயம். இதையெல்லாம் கவனித்த ராம்கோபால் வர்மா தமிழக அரசியலை கற்பனை கலந்த கதையாக எடுக்கலாம் என்று தனது நெருங்கிய வட்டாரத்தில் கூறிவருகிறாராம்.

## அடுத்த அதிரடியைத் தொடங்கிய வெங்கட் பிரபு

வெங்கட் பிரபு இயக்கத்தில் அண்மையில் வெளியாகி ரசிகர்களின் அமோக வரவேற்பைப்பெற்று வருகிறது சென்னை 28 இரண்டாம் பாகம். முதல் பாகத்தில் இருந்த அதே கொமடி, கலாட்டா, கிரிக்கெட் என அனைத்தும் இரண்டாம் பாகத்திலும் இருக்கிறது. இந்நிலையில் இந்த படத்தின் வெற்றியைத் தொடர்ந்து வெங்கட் பிரபு அடுத்த படத்திற்காக தயா ராகி விட்டார். புதுப்படத்திற்கான பூஜையும் போடப்பட்டுள்ளது. ஆனால் என்ன படம்,



யார் யார் நடிக்கிறார்கள் என்பன போன்ற எந்த விபரமும் வெளியாகவில்லை. இந்த புதுப்படத்தை டி.சிவா அவர்கள் தயாரிக்க இருக்கிறார்.



## விஜயுடன் மோத முடிவெடுத்த ஜி.வி.பிரகாஷ்

இளைய தளபதி விஜய் நடிப்பில் பொங்கல் வெளியீடாக வருகிறது பைரவா. இப்படத்தை மிகுந்த பொருட் செலவில் தயாரித்து பிரமாண்டமாக ரிலீஸ் செய்யவுள்ளது விஜயா புரொடக்ஷன்.

இந்நிலையில் பைரவாவுடன் வேற என்ன படங்கள் ரிலீஸ் ஆகவுள்ளது என்பதை பற்றிய தகவல் கிடைத்துள்ளது. நிஜவாழ்க்கையில் தளபதியின் தீவிர ரசிகராக இருக்கும் ஜி.வி பிரகாஷ் தனது ப்ருஸ்லீ படத்தை பொங்கல் தினத்தன்று வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. பொங்கல் வெளியீடு என்று அச்சடிக்கப்பட்ட போஸ்டர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## நன்றிக்கடன் செய்யும் விஜய் ஆண்டனி

விஜய் ஆண்டனி இன்று உச்சத்தில் இருக்கும் நடிகர். இவர் முதன் முதலாக சுக்ரன் படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறி முகமானார். அப்படத்தை எஸ்.ஏ.சந்திரசேகர் இயக்கியிருந்தார். ஆனால். இதற்கு முன்பே ராதிகா தயாரித்த ஒரு சீரியலில் தான் விஜய் ஆண்டனி இசையமைப்பாளராக அறிமுக மானார். அதற்காக ராதிகாவின் ராடன் நிறுவனத்திற்கு விஜய் ஆண்டனி ஒரு படம்



நடிக்க சம்மதித்துள்ளார். இப்படம் தமிழ் மற்றும் தெலுங்கு என இரண்டு மொழிகளில் தயாராகி வருகின்றது.

## சிவாஜி குடும்பத்தாரின் படத்தில் விஷ்ணு விஷால்

நடிகர் விஷ்ணு விஷால் தனக்கென்று ஒரு தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்கி தான் நடிக்கும் படங்களில் நடித்து வருகிறார். தற்போது இயக்குனர் முருகானந்தின் 'கதா நாயகன்' என்னும் படத்தில் நடித்து வருகி றார். படபிடிப்புகள் நடந்துகொண்டிருக்கும் நேரத்தில் மீண்டும் அதே இயக்குனரின் படத்தில் நடிக்க இருக்கிறார்.

இந்நிலையில் நடிகர் திலகம் சிவாஜி கணே சனின் பேரனான துஸ்யந்த் தயாரிக்கும்



படத்தில் கமிட்டாகியுள்ளார். அவர் ஏற்கனவே மீன்குழம்பும் மண்பானையும் படத்தின் மூலம் தன் முதல் தயாரிப்பை வெளியிட்டவர்.

## இரண்டாம் பாகம் எடுப்பாரா அட்லீ

இளைய தளபதி விஜயுடன் இணைந்து தெறி என்ற மாஸ் ஹிட் படத்தை கொடுத்தார் அட்லீ. இவர் தற்போது மீண்டும் விஜயுடன் கைகோர்த்துள்ளார். இவர் சில வருடங்களுக்கு முன் ஆர்யா, ஜெய் கூட்டணியின் ராஜா ராணி என்ற மெகா ஹிட் படத்தைக் கொடுத்தவர்.

இந்நிலையில் டுவிட்டரில் ஆர்யாவிற்கு பிறந்தநாள் வாழ்த்து கூறிய ஜெய் 'எப்போது ராஜா ராணி-2'



எனக் கேட்டார். அதற்கு ஆர்யா 'சென்னை-28 II போல் ராஜா ராணி-2 வும் விரைவில் தொடங்கும்' எனக் கூற, அட்லீ அடுத்து ராஜா ராணி-2 விற்கு ரெடியாவாரா? பொறுத்திருந்து பார்ப்போம்.



## 2000 நோட்டில் உடை அணிந்த நடிகை

பிரதமர் மோடி அவர்களின் ஒரு அறிவிப்பு இன்றும் பல மக்களை திண்டாட வைத்து வருகிறது. பழைய ரூபாய் நோட்டுக்களை மாற்றி புது நோட்டுகளைப் பெற மக்கள் இப்போதும் வங்கி, ATM என வரிசையில் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் நடிகை கிரிதி சனோான் 2000 ருபாய் நோட்டு வடிவத்தில் உடை அணிந்திருக்கும் ஒரு புகைப்படம் சமூக வலைதளங்களில் வலம் வருகிறது. இதைப் பார்த்த ரசிகர்கள் கிரிதி சனோனை திட்டி டுவிட் செய்தனர். இதனைப் பார்த்த நடிகை கிரிதி. உண்மையான புகைப்படத்தை வெளியிட்டு. யாரோ ஒருவர் Photoshop செய்ய மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறார் என்று டுவிட் செய்துள்ளார்.



## விஷால். சிவகார்த்திகேயனை அழவைத்துவிட்டார்

நடிகர் சங்கத்தின் பிரச்சினைகள் இன்னும் போய்க்கொண்டிருக்கிறது. சங்க உறுப்பினர்கள் பதவியிலிருந்து சரத்குமார். ராதா ரவி ஆகியோரை நீக்கம் செய்கிறோம் என்று விஷால் கூறியது பெரும் அதிர்ச்சியாக இருந்தது. இந்நிலையில் விஷயங்கள் வலுக்க ராதாரவி இனி நாங்கள் அமைதியாக இருக்கமாட்டோம். சட்டப்படி சந்திப்போம் எனக் கூறியுள்ளார்.

சமீபத்தில் அவர் அளித்த பேட்டியில், தம்பி சிவகார்த்திகேயன் அழுதது எல்லோரையும் திரும்பிப் பார்க்கவைத்தது. நாங்கள் பதவி யிலிருந்தால் நிச்சயம் அவரை விட்டுக்கொடுக்கமாட்டோம். அவ ருக்காக நான் இறங்கியிருப்பேன் எனக் கூறினார். இதேபோல் அன்று விஷால் லிங்குசாமி பிரச்சினையில் இருந்தபோது நான் விஷாலுக்காக வந்து பேசினேன் என அவர் கூறி னார்.

## எம்.ஜி.ஆர். ரஜினிக்குப் பிறகு அஜித் படைத்த சாதனை

தமிழ் சினிமாவின் கிங் ஒப் ஒப்பனிங் என்றால் அஜித் தான். இவர் படங்களுக்கு வரும் கூட்டம் நாங்கள் சொல்லித் தெரியவேண்டியது இல்லை. இந்நிலையில் அஜித் குறித்து ஒரு சிறப்பு கட்டுரையில் பிரபல வார இதழ் ஒன்றிற்கு சிட்டிசன் படத்தின் இயக்குனர் சரவணன் சுப்பையா பேசியுள்ளார். இதில் எம்.ஜி.ஆர். ரஜினி படங்களுக்கு பிறகு சிட்டிசன் படமே 13



நாட்கள் பிரபல திரையரங்கு ஒன்றில் டிக்கெட் முன்பதிவு புல் ஆனது எனக் கூறியுள்ளார்.

## ஹன்சிகாவின் அடுத்த டார்க்கெட்

ஹன்சிகா நடிப்பில் கடைசியாக வெளியான படம் மனிதன். அப்படத்திற்கு பிறகு அவருடைய நடிப்பில் விரைவில் போகன் படம் வெளியாக இருக்கிறது. இந்நிலையில் விஷ்ணு விஷால் மீண்டும் மருதநாயகம் இயக்கத்தில் நடிக்க இருப்பதாக ஏற்கெனவே தகவல்கள் வந்துவிட்டன. ஈஷான் புரொடக்ஷன் தயாரிக்க இருக்கும் இந்தப் படத்தில் நாயகியாக நடிக்க வைக்க படக்குழு ஹன்சிகாவிடம் பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக கூறப்படுகிறது. இதுகுறித்து இயக்குனர் கூறும்போது, ஹன்சிகாவிடம் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. படத்தின் ஆரம்பக்கட்டத்தில் தான் உள்ளோம். விரைவில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளி யிடுவோம் என்று தெரிவித்துள்ளார்.



# பிரபாகரன் ஈழத்தைத் தவிர எதையும் ஏற்கப்போவதில்லை என்பதே எனது அனுபவமாக இருந்தது - சந்திரிக்கா



கடந்தவாரத் தொடர்ச்சி...

அடுத்தது, சர்வதேச உதவிகளை நாடிய அரசின் முயற்சிகள் தெற்கின் பொருளாதாரத்தைக் கட்டுவது, சர்வதேச வலைப்பின்னல் ஒன்றை ஏற்படுத்தி புலிகளை ஒடுக்குவது எனத் தெரிவித்த பாலசிங்கம் சர்வதேச சதியின் நோக்கங்களையும் தெரிந்திருந்தார். பேச்சுவார்த்தைகளில் படிப்படியாக சர்வதேச நாடுகள் ஈடுபடுவது குறித்து தனது அச்சத்தை வெளியிட்ட பாலசிங்கம், இலங்கைக்கு உதவி வழங்குவது என்ற போர்வையில் பேச்சுவார்த்தைகளைப் பயன்படுத்தி அரசைப் பலப்படுத்தும் வகையில் செயற்பட்டு அரசிற்கும், புலிகளுக்கும் இடையேயான பலத்தின் சமநிலையைக் குலைக்கத் திட்டமிடுவதால் இச் சூழ்ச்சியிலிருந்து புலிகள் வெளியேறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

புலிகளுக்கு ஆதரவாக புலம்பெயர் தேசங்களில் செயற்பட்ட சக்திகள் இந்த நாடுகளின் ஆதரவைக்கோரி ஜெனீவாவில் ஆர்ப்பாட்டம் செய்ததும், பிரித்தானிய பாராளுமன்றத்தின் முன்னால் உண்ணாவிரதம் இருந்ததும் புலிகளைத் தோற்கடிக்கும் சதிவலைகளின் சூழ்ச்சிகளா? என எண்ணத் தோன்றுகிறது.

'ஒருபுறத்தில் சிங்கள தீவிரவாத சக்திகள் அமெரிக்கா, நோர்வே போன்ற நாடுகள் நாட்டைப் பிளவுபடுத்த முயற்சிப்பதாக குற்றம் சாட்ட, மறுபுறத்தில் இலங்கை அரசைப் பலப்படுத்தி ராணுவச் சமநிலையைக் குலைக்க மேற்குலக நாடுகள் சூழ்ச்சி செய்வதாக புலிகள் குற்றம் சுமத்துவது ஓர் பொதுவான போக்கை அடையாளப்படுத்துகிறது.

இரு பக்கத்திலுமுள்ள தீவிரவாத சக்திகள் அந்நிய நாடுகள் இப் பிரச்சினையில் தலையிடுவதை விரும்பவில்லை என்பதாகும். அதன் விளைவு தான் இன்றைய அனுபவங்களா?

நோர்வேயின் சமாதான முயற்சிகளை முன்னெடுத்த எரிக் சொல்கெய்ம். ஆனால் ஏகாதிபத்திய சக்திகள் அதற்கு இடமளிக்கத் தயாராகவிருக்கவில்லை.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் பல ஆண்டுகளாக நீடித்து வந்த கொடூரமான யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வந்து, நாட்டில் சமாதானத்தை உருவாக்கும் நோக்குடன் நோர்வே நாடு சுமார் ஒரு தசாப்தத்திற்கும் மேலான காலம் இலங்கையில் அனுசரணை முயற்சிகளில் ஈடுபட்டிருந்ததை அனைத்துலகமும் நன்கறியும். இந்த முயற்சியை முன்னெடுப்பதற்காக அந்நாடு அங்குள்ள சிறிய கட்சியொன்றின் தலைவரும், அமைச்சருமான எரிக் சொல்கெய்ம் என்பவரை நியமித்திருந்ததும் அனைவரும் அறிந்த விடயம்.

நோர்வேயின் இந்தச் சமாதான தூதுவர் எண்ணற்ற தடவைகள் இலங்கை யுத்தத்தில் ஈடுபட்டு வந்த இரு தரப்பினருடனும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடாத்தியதுடன், ஒவ்வொரு தடவையும் இந்தியாவுக்கும் சென்று பேச்சுவார்த்தையின் பெறுபேறுகளை விளக்கி வந்தார். அத்துடன் தாய்லாந்து, ஜப்பான், சுவிஸ்லாந்து, நோர்வேஎனப்பலநாடுகளில்இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடி உயர்மட்டச் சந்திப்புகளையும் நோர்வே ஏற்பாடு செய்தது. ஆனாலும் நோர்வேயின் அனுசரணையுடன் நடந்த இப் பேச்சுவார்த்தைகள் உருப்படியான பயன் எதையும் தரவில்லை, இறுதியில் தோல்வியிலேயே முடிந்தது. அதற்குப் பிரதான காரணம் புலிகளின் விட்டுக்கொடுக்காத போக்கும், புதிது புதிதாக அவர்கள் முன்வைத்த நிபந்தனைகளும்தான் என்பதை, நோர்வே உட்பட அனைவரும் அறிவர். இப்பொழுது நோர்வே அரசு தனது சமாதான முயற்சிகள் தோற்றதற்கான காரணங்கள், அது சம்பந்தமான தனது கருத்துகள் மற்றும் எதிர்காலத்தில் தமிழர்களும் இலங்கை அரசும் செய்ய வேண்டியவை என்பன குறித்து ஒரு நீண்ட அறிக்கையை, வெளியிட்டுள்ளது.

அத்துடன் நோர்வேயின் சமாதான முயற்சிகளை முன்னெடுத்த எரிக்சொல்கெய்ம் தனது கருத்துகளையும் பி.பி.சி செய்திச் சேவைக் கூடாக வெளியிட்டுள்ளார். நோர்வேயின் அறிக்கையையும், சொல்கெய்மின் கருத்துக்களையும் இலங்கை அரசும், புலம்பெயர் நாடுகளிலுள்ள புலிப் பினாமிகளும் தத்தமது நிலைப்பாடுகளிலிருந்து விமர்சித்தும், கண்டித்துமுள்ளனர். பரபரப்பையும், சிலுசிலுப்பையும் ஏற்படுத்தி பணம் சம்பாதிப்பதிலும், மக்களைத் தவறாக வழி நடாத்துவதிலும், எப்பொழுதும் கண்ணும் கருத்துமாக இருக்கும் முதலாளித்துவ ஊடகங்கள், நோர்வேயின் அறிக்கையை வழமை போல தலைப்புச் செய்திகளாக்கிவிட்டு ஓய்ந்துவிட்டன. நோர்வேயின் அறிக்கையிலுள்ள முக்கியமான விடயங்களை, குறிப்பாக சொல்கெய்ம் தமிழர்களையும், அரசையும் நோக்கிச் சொன்ன முக்கியமான கருத்துகளுக்கு இந்த ஊடகங்கள் எவ்வித முக்கியத்துவமும் கொடுக்கவில்லை.

இலங்கை ஊடகங்களைப் பொறுத்தவரை அவ்வாறு செய்தமைக்கு ஒரு காரணமுண்டு. அதாவது நோர்வேயின் அனுசரணை முயற்சியை ஆரம்பம் முதலே இலங்கையின் பெரும்பான்மையான மக்கள் சந்தேகக் கண்கொண்டே நோக்கி வந்துள்ளனர். அந்தச் சந்தேகங்கள் இரண்டு வகையானவை. ஒன்று, நோர்வே மேற்கத்திய ஏகாதிபத்திய சக்திகளின் ஒரு கருவியாக இலங்கைப் பிரச்சினையில் நுழைக்கப்பட்டுள்ளது என்ற கருத்தாகும்.

இரண்டாவது, நோர்வே புலிகளுக்குச் சார்பாகச் செயற்படுகின்றது என்பதாகும். உண்மையில் அன்றைய



ஜனாதிபதி சந்திரிக்காபண்டாரநாயக்க குமாரதுங்கவின் அரசாங்கமே நோர்வேயை இலங்கையில் சமாதான முயற்சிகளுக்கு அழைத்தது என்ற போதிலும், நோர்வேயின் செயற்பாடுகள் இலங்கை மக்களின் சந்தேகத்தை வலுப்படுத்தும் வகையிலேயே இருந்து வந்துள்ளன.

உண்மையில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு 1987ல் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கைஒப்பந்தமே ஓரளவு நீதியான, நடைமுறைச் சாத்தியமான தீர்வு ஒன்றைக்கொண்டு வந்தது. ஆனால் அன்று நிலவிய அமெரிக்க - சோவியத் பனிப்போர் காரணமாக, சோவியத் யூனியனுக்குச் சார்பான இந்தியா மேற்கொண்ட அந்த ஒப்பந்தத்தைச் சீர்குலைத்து, இலங்கையில் தமது காலை ஊன்றுவதற்கு ஏகாதிபத்திய சக்திகள் தீர்மானித்தன. அதற்கு விடுதலைப் புலிகளைப் பகடைக் காய்களாக உபயோகிக்கலாம் என அவை கண்டு கொண்டன. புலிகளின் அதிகார வெறி அதற்குப் பொருத்தமாக இருந்தது. எனவே புலிகள் அதனடிப்படையில் அந்த ஒப்பந்தத்தைநிராகரித்ததுடன், இந்திய அமைதிப்படையுடன் யுத்தத்திலும் ஈடுபட்டனர்.

ஆனால் அந்த யுத்தத்தில், புலிகள் இந்தியப் படையினால் முற்றுமுழுதாக அழிக்கப்படும் நிலையில் இருந்தனர். இந்தக் கட்டத்தில் புலிகள் தாம் சொல்லி வந்த அடிப்படைக் கொள்கைளைக்கூட மறந்து (சிங்களப் பேரினவாதத்தை எதிர்ப்பது, தமிழீழம் அமைப்பது) மோசமான சிங்களப் பேரினவாதியும், ஏகாதிபத்திய விசுவாசியும், அன்றைய ஜனாதிபதியுமான ஆர்.பிரேமதாசவின் உதவியை நாடி, இந்திய அமைதிப்படையை நாட்டைவிட்டு வெளியேற வைத்துத் தப்பிப் பிழைத்துக் கொண்டனர். இந்த ஏற்பாட்டைச் செய்வதில், ஏகாதிபத்தியத் தரகரும், புலிகளின் அரசியல் ஆலோசகருமான அன்ரன் பாலசிங்கம் முக்கிய பங்கு வகித்தார்.

புலிகள் இந்திய அமைதிப்படையை வெளியேற்றியதுடன் மட்டும் நின்றுவிடவில்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தம் உருவாகிய காலத்தில் இந்தியப் பிரதமராகவிருந்த ராஜீவ் காந்தியை; இந்தியாவில் வைத்து, அதுவும் தமிழக மண்ணில் வைத்து மனித வெடிகுண்டு மூலம் கொலை செய்தனர். அதன் மூலம் இந்தியாவை இலங்கைப் பிரச்சினையிலிருந்து ஒதுங்கவைத்து, இலங்கையின் கள நிலவரத்தை ஏகாதிபத்தியத் தலையீட்டுக்குச் சாதகமான முறையில் 'துப்பரவு' செய்து வைத்தனர்.

அதன்பின்னர், புலிகள் வடபகுதி முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பிரேமதாச அரசுடன் கடுமையான யுத்தத்தை ஆரம்பித்ததுடன், இறுதியில் பிரேமதாசவையும் கொலை செய்தனர். அதன் பின்னரும் ஏகாதிபத்தியவாதிகள் தமக்கு விசுவாசமானவர் ஒருவரை இலங்கையின் ஜனாதிபதியாகக் கொண்டுவர முயன்றபோதிலும், 17 வருட ஐ.தே.க அரசின் கொடுமை தாங்காத இலங்கை மக்கள் சந்திரிக்காவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தனர். ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாரம்பரியக் குடும்பத்திலிருந்தும், அரசியலிலிருந்தும் வந்த சந்திரிக்கா, இனப்பிரச்சினைக்கும் ஒரு நியாயமான தீர்வைக் காண விரும்பினார்.

ஆனால் ஏகாதிபத்திய சக்திகள் அதற்கு இடமளிக்கத் தயாராகவிருக்கவில்லை. அவர்கள் அரசியல் ரீதியாக முரண்பட்ட, ஆனால் இனவாத அடிப்படையில் ஒன்றுபடக்கூடிய ஐ.தே.க, ஜே.வி.பி, புலிகளால் வழிநடாத்தப்பட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி, ஹெல உறுமய, விக்கிரமபாகு கருணாரத்ன என அனைவரையும் ஓரணியில் திரட்டியதுடன், சந்திரிக்காவின் அரசிலிருந்த சிலரையும் உடைத்தெடுத்து, சந்திரிக்காவின் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளுக்குக் குழி பறித்தனர். அத்துடன் புலிகள் முன்னெப்போதையையும்விட மிகவும் உக்கிரமான முறையில் அரச படைகள் மீதான தாக்குதலையும் ஆரம்பித்தனர்.

இவ்வாறான ஒரு கடுமையான சூழலை உருவாக்கி சந்திரிக்காவுக்கு நெருக்கடியைக் கொடுத்து, சர்வதேச மத்தியஸ்தம் ஒன்றுக்குச் செல்லுமாறு அவரை நிர்ப்பந்தித்தனர். அதன் விளைவாகவே சந்திரிக்கா நோர்வேயை அனுசரணையாளராக அழைக்கும் சூழ்நிலை உருவாக்கப்பட்டது.

தொடரும்...

நெற்றிப்பொறியன்

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளும், பெண்ணுரிமையும்



கடந்தவாரத் தொடர்ச்சி...

அதாவது வான்தேவி என்ற பின் தங்கிய கிராமப்பகுதியில் தாயில்லாமல் வளர்ந்த 16 வயது பெண்ணை அவளது தந்தையும் மாமனாரும் இணைந்து வல்லுறவுக்கு உட்படுத்தினர். இதன் காரணமாக அப்பெண் மன ரீதியிலாகவும். உடல் உள ரீதியாகவும் பாதிக்கப்பட்டு கர்ப்பமாக அப்பெண் காணப்படுவதாக அச் செய்தித்தாள் குறிப்பிடுகின்றது. அதன் பின்னர் அப்பெண் காப்பகத்தில் சேர்க்கப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது.

இதனை வைத்து நோக்குகின்றபோது இங்கு குடும்ப வன்முறை அங்கு தந்தையினதும். மாமனினதும் காரணமாக ஏற்படுத்தப்படுகின்றது. குறிப்பாக இங்கு குடும்பத்துக்குள்ளேயே பாலியல் சார்ந்த வன்முறை அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் வன்முறைகளில் பெரும்பாலானவை பாலியல் சார்ந்த இம்சையாகவே காணப்படுகின்றது. எனவே தான் பாலியல் சார்ந்த அனைத்து இம்சைகளையும் ஒழிப்பதன் மூலம் நாம் வன்முறையை ஒழிப்பதற்கான மிகக்குறைந்த முயற்சிகளை மேற்கொள்ள முடியும்.

3.3.2 வன்முறையைச் சந்திக்கும் சிறு பிள்ளைகள்

வன்முறையை சந்திக்கின்றவர்களாக அதிகமானோர் வீட்டுப் பிள்ளைகளாகவே காணப்படுகின்றனர். அந்த வகையில் பிள்ளைகளை அடித்தல். துன்புறுத்தல். அவர்களின் சுதந்திரத்தை பறித்தல் போன்றன இவ்வன்முறையின் தாக்கத்தினால் ஏற்படுகின்றன. குறிப்பாக வன்முறையின் போது குறித்த நபர்களின் சண்டை மற்றும் சச்சரவுகள் காரணமாக குடும்ப அங்கத்தவர்களால் தாக்கப்படுதல் மற்றும் உடல் உள ரீதியாக துன்புறுத்தல் போன்ற நடவடிக்கைகளின் காரணமாக சிறு பிள்ளைகள் தமது ஆளுமையை இழப்பதுடன் மிகவும் உடல் மற்றும் உள ரீதியாக பாதிக்கப்படுகின்றவர்களாகவே காணப்படுகின்றனர். அந்த வகையில் சில உதாரணம் மூலம் இவற்றை விளங்கிக் கொள்ளலாம்

டென்மார்க்கில் உள்ள அரச பாடசாலைகளில் 5-9ம் வகுப்பிற்கு இடைப்பட்ட வகுப்புக்களில் படிக்கும் மாணவர்களில் நால்வருக்கு ஒருவர் என்ற விகிதத்தில் வீட்டில் அடி வாங்கி வளரவேண்டிய அவலம் இருப்பதாக டென்மார்க்கின் தலைநகரில் செய்யப்பட்ட ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது. கொப்பன்கேகனில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆசிரியர் நடாத்திய கருத்துக் கணிப்பில் மூன்று பிள்ளைகளுக்கு இரண்டு பிள்ளைகள் என்ற வீதத்தில் வீட்டில் அடித்து வளர்க்கப்படுவதாக தெரியவந்துள்ளதாக பொலிற்றிக்கன் பத்திரிகை ஆச்சரியம் தெரிவித்துள்ளது. ஆகவே நாடளாவிய ரீதியில் இது குறித்த ஆய்வை நடாத்தவேண்டுமென சமூக சேவைகள் அமைச்சு குறிப்பிட்டதன் பேரில் கருத்துக்கணிப்பின் படி வீட்டில் அடித்து வளர்க்கும் பிள்ளைகள் பாடசாலைகளில் வன்முறையாளர்களாக மாறுவதும் பின்னர் பிரச்சினைக்குரிய பிள்ளைகளாக மாறுவதும் இந்த வீட்டு வன்முறையின் பொதுவான அம்சமாகவே காணப்படுகின்றது. அந்த வகையில்தான் இந்த வீட்டு வன்முறையானது பெற்றோர்கள் மட்டுமன்றி குழந்தைகளும் பாதிக்கப்படுவதற்கு நிலைக்களனாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

3.3.3 வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு வன்முறை அதிகரிப்பு

வேலைக்குச் செல்லும் மகளிர் அவர்களின் குடும்பத்தின் தேவையை ஓரளவுக்கு செய்யும் அதேவேளையில் அவர்களுக்கான வன்முறை அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது. அந்த வகையில் நாம் பின்வரும் விடயத்தை உதாரணமாகக் கொள்ளலாம். அதாவது பெங்களூரைச் சேர்ந்த சுமார் 16 வயது முதல் 25 வயது வரையிலான திருமணமான பெண்கள் 750 பேரிடம் 2005 முதல் 2006ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் நடாத்தப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

வேலைக்குச் செல்லும் பெண்களில் சுமார் 80 வீதத்தினர் கணவனால் துன்புறுத்தலுக்கு ஆளாக நேரிடுவதாக ஆய்வறிக்கைகள் குறிப்பிடுகின்றன. அதே நேரத்தில் வீட்டில் இருக்கும் பெண்களைக் காட்டிலும் பணிக்குச் செல்லும் பெண்களுக்கு கணவனின் துன்புறுத்தல் அதிகமாக காணப்படுகின்றது என்றும் கூறப்படுகின்றது. வேலைக்குச் செல்லும் பெண்களின் கணவன் வேலையைத் தேடுவதில் சிரமம் ஏற்பட்டாலோ அல்லது ஒரு வேலையை தக்கவைத்துக் கொள்வதில் பிரச்சினை இருந்தாலோ சம்பந்தப்பட்ட பெண்களுக்கு வன்முறை இரட்டிப்பாவதாகத் தெரிய வருகின்றது.

04. பெண்ணுரிமைகள்

உரிமைகள் எனப்படுபவை இன்று அனைவராலும் உச்சரிக்கப்படுகின்ற விடயமாகிவிட்டது. குறிப்பாக பெண்கள். சிறுவர் உரிமைகள் தொடர்பான விடயங்கள் அண்மைக்காலங்களில் சர்வதேச அளவில் மிகவும் கரிசனைக்குரிய விடயங்களாகி இருக்கின்றன. இன்று சர்வதேச அளவில் காணப்படும் அரசுகளில் பெரும்பாலானவை 1950களின் பின் தோற்றம் பெற்ற ஆசிய. ஆபிரிக்க. இலத்தீன் அமெரிக்கக் கண்டங்களைச் சேர்ந்த அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளாகும். இந்நாடுகளில் பெண்கள் உரிமைகள் தொடர்பான விடயங்கள் மேலும் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய நிலையிலேயே இன்றும் காணப்படுகின்றன. சர்வதேச மனித உரிமைகள் சட்டக் கருத்தேற்பிலே பால்நிலைச் சமத்துவம் இன்மை என்பது உள்ளூர் மட்டங்களிலும். சர்வதேச மட்டங்களிலும் தீர்க்கப்படவேண்டிய முக்கிய விடயமாக இனங்காணப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பிரகடனத்தையும். பெண்களுக்கு எதிரான சகல பாராபட்சங்களுக்கும் எதிரான பிரகடனத்தையும் பல நாடுகள் ஏற்று அங்கீகரித்துள்ள நிலையிலும் நடைமுறையில் அவை எந்தளவு தூரம் கடைப்பிடிக்கப்படுகின்றன என்பதும் தொடர்ந்தும் சிக்கல் வாய்ந்ததாகவே காணப்படுகின்றது. ஏனெனில் பல்வேறு நாடுகளில் பெண்கள் மீதான பாராபட்சம் என்பது தொடர்ந்த வண்ணமே உள்ள நிலையில் இவை கலாசார சமூக அமைப்பு முறை. குடும்பம் என்ற பல்வேறு காரணங்களைக் காட்டி நியாயப்படுத்தப்படுகின்றன.

இலங்கையும் இத்தகையதோர் நிலைமையில் காணப்படுவதாகவே அடையாளம் காணப்பட்டு இருக்கின்றது. பெண்கள் உரிமைகள் தொடர்பான விடயங்களை உள்நாட்டுத் தராதரங்களுக்கு உள்ளீர்த்து நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலமே அதனைச் சிறந்த முறையில் அமுல்படுத்தக் கூடியதாக இருக்கும்.

4.1 சர்வதேச தராதரம்

பெண்கள் உரிமைகள் பற்றி பல்வேறு சமவாயங்களும். பட்டயங்களும் கையாளப்படுகின்றனவையாக உள்ளன. அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்தின் உறுப்புரை ஒன்றின் பிரகாரம் சகல மனித உரிமைகளும் சமனானவையாக கொள்ளப்படவேண்டியதானது என்பது அறவே புறந்தள்ளப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. மேலும் இப்பிரகடனத்தின் வாயிலாக உயிர் வாழும் உரிமையும். சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட முடியாமைக்கான உரிமையும் காணப்படுகின்றது. அடுத்துப் பெண்கள் தொடர்பான மிக முக்கியமான சமவாயமாக "பெண்களுக்கு எதிரான சகலவிதமான பாராபட்சங்களுக்கும் எதிரான பிரகடனம்" (CEDAW) விளங்குகின்றது.

பெண்களுக்கு எதிரான சகலவிதமான பாராபட்சங்களும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். இதன் உறுப்புரை 2 கூறுகின்றது. பெண்களது தனித்துவமான பண்புகளைப் பேணிப்பாதுகாக்கின்ற 1949 ஆம் ஆண்டின் ஜெனிவா சமவாயத்தில் போர்ச் செயற்பாடுகளில் பெண்களின் தனித்துவம் பேணிப்பாதுகாக்கப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே இவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது பெண்கள் உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகள் மனித உரிமைகள் என்ற எண்ணக்கரு தோற்றம் பெற்ற போதே உருவாகிவிட்டது என்றே கூறமுடியும். இதேவேளை ஐ.நா பொதுச்சேவை பிரகடனம் 1903இன் பாயிரம். பெண்களுக்கு எதிரான வன்முறைகள் என்பதை சமத்துவம். சமாதான அபிவிருத்தி என்பதற்கு தடைக்கற்களாகும் எனக் கூறியிருப்பதுடன் இதன் பின்னைய ஏற்பாடுகள் பாராபட்சம் என்ற ஏற்பாட்டுக்குள் குடும்ப வன்முறை எனும் விடயத்தை உள்வாங்கியுள்ளனர். இவற்றுக்கு எல்லாம் மேலாக பெண்களை ஒரு தனிப்பிரிவினராக ஏற்று அவர்களுக்குரிய உரிமைகளை மட்டுமே முற்றுமுழுதாகக் கையாளுகின்றதை பெண்கள் சமவாயம் விளக்குகின்றது. எனவே இவ்வாறு பலதரப்பட்ட சமவாயங்களும் பிரகடனங்களும் சர்வதேச அளவில் பெண்கள் உரிமைகள் தொடர்பில் காணப்படும் நிலையில் இலங்கை இவற்றுள் அநேகமானவற்றை ஏற்று அங்கீகரித்துள்ளதாகவே காணப்படுகின்றது.

4.2 பெண்களுக்கு எதிரான எல்லா வகையான பாராபட்சம் காட்டுதல்களை இல்லாது ஒழிப்பது பற்றி ஐ.நா சமவாயம்

பெண்களுக்கு எதிராக உள்ள எல்லா வகையிலான பாராபட்சம் காட்டி இல்லாது ஒழிப்பது பற்றிய சமவாயம் ஐ.நா பொதுமாநாட்டினால் 1979இல் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது. பெண்களது மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட சட்ட முறையாக வலுவில் உள்ள மிகவும் சுருக்கமான உடன்படிக்கை ஒன்றான இது 1981 செப்டெம்பர் மாதம் 3ம் திகதி அமுலுக்கு வந்தது. பெண்களுக்கான சர்வதேச உரித்துடமைச் சட்டம் ஒன்றாக அழைக்கப்படுகின்ற இச் சமவாயத்தில் பெண்களுக்கும். ஆண்களுக்கும் இடையே சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகள் மற்றும் தரக்கட்டளைகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

4.3 இலங்கையும் பெண்கள் உரிமைகளும்

இலங்கை பெண்கள் உரிமைகள் தொடர்பான பல சர்வதேச பிரகடனங்களை ஏற்றும் அரசியல் அமைப்பு ரீதியாகவும் இவ்வுரிமைகளை ஏற்று அங்கீகரித்துள்ள நிலையில் நடைமுறையில் இவற்றின் பிரயோகத்தைப் பார்ப்பது அவசியமாகின்றது. இலங்க அரசியல் அமைப்பு உறுப்புரை 12 இன் கீழ் சமத்துவ உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டு இருப்பினும் அவை ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் சட்டங்களுடன் முரண்படும் போது அச்சட்டங்களே மேலோங்கும் என்ற நிலை காணப்படுகின்றமை இதன் செயற்பாட்டுத் தன்மைக்கு குந்தகமான ஒரு நிலையையே தோற்றுவிப்பதாகின்றது. அது மட்டுமல்லாது இலங்கை ஒரு பன்மைத்துவக் கலாசார பின்னணியையும். பன்மைத்துவ சமூக அமைப்பையும் கொண்ட நாடாகும். இவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது பெண்கள் மீதான உரிமைகள். மீறல்கள் எந்த மட்டத்தில் அதிகம் இடம் பெறுகின்றது என்பது இனங்காணப்பட வேண்டியதாகின்றது.

4.4 இலங்கை பெண்கள் சமவாயம்

1993ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி இலங்கை அரசாங்கத்தினால் இலங்கைப் பெண்கள் சமவாயம் அங்கீகரிக்கப்பட்டது. மகளிர் விவகார அமைச்சின் தேசிய மகளிர் குழுவினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

4.5 பெண்கள் சமவாயம் என்றால் என்ன?

பெண்கள் சமவாயம் என்பது பெண்களுக்கு எதிராக எல்லா வகையிலான வேறுபாடுகளை இல்லாதொழிக்கும் மற்றும் பெண்களுக்கான தீர்மானங்கள் எடுக்கும் துறைகளைப்பற்றி. செயற்படுவதைப்பற்றி அரசாங்கத்தின் பொறுப்பை வெளிப்படுத்தும் பெண்கள் உரிமைகள் பற்றிய அரசாங்கக் கொள்கை சம்பந்தப்பட்ட வெளியீடாகும்.

05. பெண்ணுரிமைக்கான உறுப்புரைகள்

5.1 சீடோ சமவாயம்

சீடோ சமவாயத்தில் உள்ளடக்கப்பட்டு இருக்கும் விடயங்கள் 30 உறுப்புரைகள் ஆகும். இதன் முதலாம் உறுப்புரையில் பெண்களுக்கு இழைக்கப்பட்டுவரும் பாராபட்சங்கள் எவை என்பது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்களின் உரிமைகள் வழங்குவது தொடர்பாக அரசாங்கம் கொண்டு இருக்கும் பொறுப்பு உறுப்புரை 2இல் இருந்து 6 வரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உறுப்புரை 7-16 வரையில் பெண்களுக்கு உள்ள உரிமைகள் எடுத்து விளக்கப்பட்டுள்ளன. உறுப்புரை 17-26 வரையில் பெண்களின் உரிமை மீறல்கள் தொடர்பாகக் கண்டறியும் சீடோ சமவாயம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

5.1.1 பெண்களுக்கு இழைக்கப்படும் பாராபட்சங்கள்

உறுப்புரை 1: பெண்களுக்கு இழைக்கப்படும் பராபட்சங்கள்

தமது குடும்பத்தின் உள்ளும். பாடசாலையிலும். பாதையிலும் என பல்வேறு இடங்களிலும் பெண்கள் பெருந்தொகையான துன்ப துயரங்களை அனுபவிக்க வேண்டியவர்களாக இருந்து வருகின்றனர். இதன் காரணமாக அவர்களால் சுதந்திரமான விதத்தில் தமது வாழ்க்கையை நடாத்தமுடியாது உள்ளது. பெண்களின் முன்னேற்றத்துக்கு இடையூறு விளைவிக்கும் அல்லது அவர்களுடைய சுதந்திரத்தை பறிக்கும் எந்தவொரு நடவடிக்கை காரணமாகவும் பெண்களுக்கு எதிரான பாராபட்சங்களைத் தடுக்கும் உரிமை.

5.1.2 அரசாங்கத்தின் பொறுப்பு

உறுப்புரை 2 - 6: அரசாங்கத்தின் பொறுப்பு

பெண்களின் உரிமைகள் தொடர்பான சீடோ சமவாயத்தை அங்கீகரித்து. அதில் கைச்சாத்திட்ட நாடுகளில் எமது நாடும் ஒன்றாகும். அதன் காரணமாக சீடோ சமவாயத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் உரிமைகளை இலங்கை வாழ் பெண்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற சூழலை அமைப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். பெண்களுக்கு நியாயம் வழங்கும் விதத்தில் மற்றும் புதிய சட்டங்களை உருவாக்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான பொறுப்பினை அரசாங்கம் கொண்டுள்ளது. பெண்களின் உரிமைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் பொருட்டு அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் உரிமை பெண்களுக்குள்ளது.

5.1.3 அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்கும் சம உரிமை

உறுப்புரை 7: அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்கும் சம உரிமை

அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்பதற்கு ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சமமான ஒரு உரிமை உள்ளது. ஆனால் பெரும்பாலான பெண்களின் அரசியல் உரிமை வாக்களிப்பதற்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளது.

தொடரும்...

அருணாதுரை. திருகோணமலை

# பொன்மொழிகள்

ஆண்டவன் ஒவ்வொரு நல்ல உள்ளங்களிலும் அழகாக வீற்றிருக்கிறான். நாங்கள்தான் அதைக் கண்டுகொள்வதில்லை.

உலகில் உள்ள எல்லா இதயங்களும் நல்ல இதயங்களே. ஆனால் சந்தர்ப்பம். சூழ்நிலைகள் அதை மாற்றியமைக்கின்றன.

ஆண்டவன் எல்லோருக்கும் ஏதோ ஒரு திறமையைக் கொடுத்திருக்கிறான். நாம் அதைக் கண்டுகொள்ளாமல். திறமையற்றவர்களாகத் திரிகிறோம்.

நீ மற்றவர்களுக்காக வழிவிட்டுக்கொடு. இறைவன் நிச்சயம் உனக்கு வழி விடுவான்.

நீ எப்போது யாருமற்ற ஏழை. எளியவர்களுக்கு உதவுகிறாயோ. அப்போது ஆண்டவன் உன்னிடம் 'கடன்காரன்' ஆகிறான்.

நாளை இறந்துவிடுவீர்கள் என்றால் எப்படி வாழ்க்கையை வாழ்வீர்களோ அப்படி வாழுங்கள்! நீண்டநாள் வாழ்வீர்கள் என்றால் எப்படிக் கற்றுக்கொள்வீர்களோ அப்படி கற்றுக்கொள்ளுங்கள் - மகாத்மா காந்தி.

இன்னும் மீதமிருக்கும் அழகான விஷயங்களைப் பற்றி யோசிக்கிறேனே தவிர. நான் எல்லா துன்பங்களையும் நினைத்து குழப்பிக் கொள்வதில்லை - ஆன் ஃபிராங்க்.

வாழ்க்கையின் முடிவுரைதான் முதுமை - எமிலியா பார் (இங்கிலாந்து நாவலாசிரியர்).

திருமண வாழ்வில் மகிழ்ச்சி என்பது முழுக்க முழுக்க தற்செயலானதே - ஜேன் ஆஸ்டன் (ஆங்கில நாவலாசிரியர்).

நடந்து முடிந்த எதையும் நான் ஒருபோதும் கவனிப்பதில்லை. எதை செய்து முடிக்க வேண்டும் என்பதில் மட்டும் கவனமாக இருக்கிறேன் - புத்தர்.

வெளிச்சத்தில் தனியாக நடப்பதைவிட. இருளில் ஒரு நண்பரின் துணையோடு நடப்பது சிறந்தது - ஹெலன் கெல்லர்.

நம்பிக்கை கடவுளையும் அசைக்கும். பயம் எதிரியையும் செயல்பட வைக்கும் - ஜோயல் ஆஸ்டீன்.


இன்றைய தினத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால். நேற்றைய தினத்தை நீங்கள் ஆராயவேண்டும் - பியர்ல் எஸ்.பக் (அமெரிக்க எழுத்தாளர்)

இதயம் எல்லாக் காலத்திலும் கொஞ்சம் கூட அனுபவம் இல்லாததாகவே இருக்கிறது - ஹென்றி டேவிட் தோரே.

காதல் போரைப் போன்றது. எளிதாக ஆரம்பித்துவிடலாம். நிறுத்துவது மிக கடினம் -ஹெச்.எல்.மென்கென் (அமெரிக்க பத்திரிகையாளர்).

நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன்.
- ஆபிரகாம் லிங்கன்

ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள் அவனே எனது வழிகாட்டி - ஜூலியஸ் சீசர்



உலக வரைபடத்திலுள்ள மூலை முடுக்குகளுக்கெல்லாம் போக விரும்புகிறாயா. ஒரு நூலகத்துக்குச் செல் - டெஸ்கார்ட்டஸ்.

போதும் என்று நொந்துபோய். புதுவாழ்வைத் தேடுகிறீர்களா ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்கு. - இங்கர்சால்

சில புத்தகங்களை சுவைப்போம். சிலவற்றை அப்படியே விழுங்குவோம். சில புத்தகங்களை மென்று ஜீரணிப்போம் - பிரான்சிஸ் பேக்கன்

புரட்சிப் பாதையில் கைத் துப்பாக்கிகளைவிட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே - லெனின்

உண்மையான வாசகன். வாசிப்பதை முடிப்பதே இல்லை - ஆஸ்கார் வைல்ட்

உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அது போல மனதுக்குப் பயிற்சி புத்தக வாசிப்பு - சிக்மண்ட் ஃப்ராய்ட்

பழங்காலத்திய மகா புருஷர்களை நேரில் தரிசித்து. அவர்களுடன் உரையாட வேண்டுமா? நூலகத்துக்குப் போ - மாசே துங்

ஒரு எழுத்தாளன் ஒரு புத்தகத்தைத் தொடங்கி வைக்கிறான். வாசகன் அதனை முடித்துவைக்கிறான்.

பிறரைச் சீர்திருத்தும் கடமையை விட. தன்னை சீர்த்திருத்துவதே முதல் கடமை - பெர்னாட்ஷா

தலைசிறந்த மனிதர் ஒவ்வொருவரும். தனித்தன்மை வாய்ந்தவர் - எமர்சன்

நல்ல நூல்களைப் படிப்பது. தலைசிறந்த மனிதருடன் உரையாடுவதைப் போன்றது - தெகார்த்

உன் மகிழ்ச்சி நிலைத்திருக்க வேண்டுமானால். எதிலும் மிதமாக இரு - சார்லஸ் அகஸ்டின்

சுறுசுறுப்புடன் எல்லாவற்றையும் செய்கிறவனுக்கு. எல்லாக் கதவுகளும் திறந்திருக்கும் - எமர்சன்

சண்டைக்கு இருவர் தேவை. நீங்கள் அவ்விருவரில் ஒருவராக இருக்காதீர்கள் - ஆவ்பரி

தவறு செய்துவிட்டோம் என்று தெரிந்தும். அதை ஒப்புக்கொள்ள வெட்கப்படாதே - ஆவ்பரி

சிறிய மனிதர்களைப் பெருந் தன்மையுடன் நடத்துபவன் தான் பெரிய மனிதன் - கார்லைல்

எல்லாருக்கும் நண்பனாயிருப்பவன். யாருக்கும் நண்பனல்ல - முல்லர்

பெரியோர் பேச்சு. அறிவைத் தரும். பெரியோர் மௌனம். அன்பைப் பெருக்கும் - கதே

அளவுக்கு மிஞ்சி கிண்டல் செய்தால். அன்பு முறிந்து. ஆபத்தில் போய் முடியும் - வால்டேர்

அழகு என்பது. சில காலமே நிற்கும் கொடுங்கோலாட்சி. அதற்கு நீ அடிமையாகாதே - வால்டேர்

# உலக நாடுகளையும். இலங்கை அரசையும் அதிரவைத்த தேசியத் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை

கடந்தவாரத் தொடர்ச்சி...

சமாதான வழியில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கு எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கின்றது. நாம் சமாதான வழிமுறைகளுக்கு எதிரானவர்கள் அல்லர். அதேவேளை நாம சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றத் தயங்கவும் இல்லை. சமாதான வழிமூலம் கிட்டப்படும் தீர்வானது நியாயமானதாக. நீதியானதாக சமத்துவமானதாக. தமிழரின் அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்வதாக அமையவேண்டும் என்பதே எமது விருப்பம்.

தமிழர் பிரச்சினையின் அடிப்படைகளை உணர்ந்து சமாதான வழியில் தமிழர்களுக்கு நீதி வழங்க சந்திரிக்கா அரசு முன்வருமா என்பது எமக்குச் சந்தேகமே.

காலமும் வரலாறும் எமது போராட்ட இலட்சியத்திற்கு நியாயம் வழங்கியே தீரும். அப்போது உலகமும் அதனை ஏற்றுக் கொள்ளும்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைத் தீவில் சிங்கள இனவாதிகள் ஆட்சிபீடம் ஏறிய காலத்திலிருந்து தமிழர் நிலம் விழுங்கப்பட்டு வருகிறது. தமிழர் நிலத்தை அபகரித்து சிங்கள மயமாக்குவது ஒருபுறமும். தமிழர் நிலத்தை ஆக்கிரமித்து. அதன் வளங்களை அழித்து. அங்கு வாழ்ந்த மக்களை அகதிகளாக்குவது இன்னொரு புறமுமாக. எமது நிலத்தின் மீது கொடுமை நிகழ்ந்து வருகின்றது.

ஆண்டுதோறும் எனது மாவீரர் நினைவுரையில் நான் சமாதானத்தையும். சமாதான வழியிலான அரசியற் தீர்வையும் வலியுறுத்தத் தவறவில்லை. அதேவேளை. சமாதான வழியில் இனப்பிரச்சினைக்குத தீர்வு காண சிங்களப் பேரினவாதம் தயாராக இல்லை என்பதையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

ஆட்பலம். ஆயுத பலம். ஆன்ம பலம். மக்கள் பலம். என்ற ரீதியில் சகல பலத்தோடும் நாம் வலுப்பெற்று நின்றபோதும். நாம் சமாதானப் பாதையைக்கைவிடவில்லை. உயிரழிவையும் இரத்தக் களரியையும் தவிர்த்து. சமாதான வழியில். நாகரீகமான முறையில் தமிழரின் சிக்கலைத் தீர்க்கவே நாம் விரும்புகின்றோம்.

நாம் நம்பிக்கையுடன் எமது இலட்சியப் பயணத்தைத் தொடர்வோம்.

எமக்கு முன்னால் எழக்கூடிய எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நாம் நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்து செல்வோம்.

நாம் ஒரே மக்கள் சக்தியாக. ஒன்றுபட்ட தேசமாக. ஒருமித்தெழுந்து. எமது இலட்சியப் பாதையில் விரைந்து செல்வோம்.

சாவினைத் தழுவிய எமது வீரர்களின் ஆன்மாவாக சுதந்திரம் எமக்காக காத்து நிற்கின்றது.

விடுதலை என்பது வாழ்வின் அதியுயர்ந்த விழுமியம். அந்த விழுமியத்தை இலட்சியமாக வரித்து. அதற்காக வாழ்ந்து. அதற்காகப் போராடி. அதற்காக மடிந்த எமது மாவீரர்கள் மகத்தான மனிதப் பிறவிகள். அவர்களது வாழ்வும் வரலாறும் எமது வீர விடுதலைக் காவியத்தின் உயிர் வரிகள்.

மாவீரர்களே. தமிழர் தேசம் உங்களுக்குத் தலைவணங்குகிறது. உங்களது தற்கொடையால் தமிழீழ மக்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றார்கள். உங்களது இரத்தத்தாலும். வியர்வையாலும். உங்களது இலட்சிய உறுதியாலும் கட்டியெழுப்பப்பட்ட எமது விடுதலை இயக்கம். இன்று யாராலும் வெற்றிகொள்ள முடியாத மாபெரும் போராட்ட சக்தியாக உலகப் புகழீட்டி நிற்கிறது. போர் அரங்கில் நீங்கள் படைத்துச்சென்ற மகத்தான சாதனைகளையே இன்று உலகரங்கில். நாம் அரசியல் வெற்றிகளாக அறுவடை செய்து வருகின்றோம்.

இன்று உலகம் மாறி வருகிறது. உலக ஒழுங்கும் மாறி வருகிறது. உலக நாடுகளின் உறவுகளும் மாறி வருகின்றன. மனித சமுதாயம் முன்னென்றும் காணாத புதிய சவால்களுக்கு முகம்கொடுத்து நிற்கிறது. இன்றைய உலக நிதர்சனத்தை. அதன் யதார்த்தப் புறநிலைகளை நாம் உதாசீனம் செய்ய முடியாது. இன்றைய காலத்தையும். இக்காலத்தில் கட்டவிழும் சூழலையும் நாம் ஆழமாகப் புரிந்து. கால நிலை மாற்றங்களுக்கு ஏற்ப. எமது விடுதலைப் பாதையை செப்பனிடுவது அவசியம். இன்றைய காலத்தின் தேவை அது. உலகப் போக்குடன் முரண்படாது. உலக வரலாற்றின் ஓட்டத்திற்கு இசைவாக. நாமும் எமது போராட்ட வரலாற்றை முன்நகர்த்திச் செல்வதே விவேகமானது. இன்றைய வரலாற்றின் கட்டாயமும் அதுவே.

எமது முதலாவது மாவீரன் களப்பலி ஆகியதைத் தொடர்ந்து இன்று வரை பல்லாயிரக் கணக்கில் எமது போராளிகள் விடுதலைப் போரில் களமாடி வீழ்ந்திருக்கிறார்கள். எமது இனத்தைப் பேரழிவிலிருந்து பாதுகாத்து. எமது தாயக நிலத்தை அந்நியனிடமிருந்து மீட்டெடுக்க எமது விடுதலை இயக்கம் அளப்பரிய அர்ப்பணிப்புகளைச் செய்துள்ளது. எமது மாவீரர்களின் இம் மகத்தான தியாகங்களால். எத்தனையோ தடவைகள் நாம் பேரழிவுகளின் விளிம்பிலிருந்து மீண்டிருக்கின்றோம். மரணத்தின் வாயிலுக்குச்சென்று மறுபிறவி எடுத்திருக்கின்றோம். வல்லாதிக்க சக்திகளின் தலையீடுகளைத் தனித்து நின்று தகர்த்திருக்கின்றோம். எமது விடுதலை இயக்கம் இன்று வானளாவ வளர்ந்து நிற்கிறது. நிமிர்ந்து நிற்கிறது. எமது இயக்க விருட்சத்தின் வேர்களும் விழுதுகளுமாக நிற்பவர்கள் எமது மாவீரர்களே.

நாம் வன்முறையில் பற்றுக்கொண்ட போர் வெறியர் என்றும். சமாதானத்தின் விரோதிகள் என்றும். காலங்காலமாக சிங்களப் பேரினவாதிகள் மேற்கொண்டு வந்த பரப்புரையைப் பொய்யாக்கும் வகையில் நாம் நேர்மையுடனும். உறுதியுடனும் சமாதான வழிமுறையைத் தழுவி நிற்கின்றோம்.

ஆயுத வன்முறையில் ஆசைகொண்டு நாம் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. இன அழிவை இலக்காகக் கொண்ட இனவாத ஒடுக்குமுறையின் உச்சத்தில். அந்நிய இராணுவ அடக்குமுறை சகிக்க முடியாத அளவிற்குத் தீவிரமடைந்த கட்டத்திலேயே நாம் ஆயுதம் ஏந்தினோம். எமது மக்களின் உயிரைக் காக்கவும். எமது மக்களின் உரிமையை நிலை நாட்டவும். எமது இயக்கம் மேற்கொண்ட ஆயுதம் தரித்த விடுதலைப் போரை பயங்கரவாதமாகச் சிங்கள அரசுகள் சித்தரித்தன. தமிழரின் உரிமைப் போரைத் திரிபுபடுத்தி. இழிவுபடுத்தி உலகெங்கிலும் விசமப் பிரச்சாரங்கள் முடுக்கிவிடப்பட்டன. இப் பொய்யான பரப்புரையை நம்பி. பல உலக நாடுகள் எமது அமைப்பிற்குத் தடை விதித்தன.

பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு உலகஅரங்கிலிருந்து நாம் ஓரம்கட்டப்பட்டோம். உலக நாடுகள் ஒன்று திரண்டு எதிரியின் போர்த் திட்டத்திற்கு முண்டு கொடுத்தன. அனைத்து உலகத்தினதும் ஆதரவும். ஆயுத உதவியும் கிட்டியதால் மூர்க்கம் கொண்ட எதிரி போரைத் தீவிரப்படுத்தினான். நாம் தனித்து நின்று போருக்கு முகம் கொடுத்தோம். மக்களின் ஆதரவு மட்டும் எமக்கு மலையாக நின்றது. நாம் அலையலையாகத் திரண்டெழுந்து ஆக்கிரமிப்புப் படைகளுடன் மோதினோம். போர்க் களையில் எமது வீரர்கள் படைத்த அபாரமான சாதனைகள் உலக இராணுவ நிபுணர்களையே திகைப்பில் ஆழ்த்தின.

போரில் புலிகளை வெற்றிகொள்ள முடியாது என்பதனைச் சிங்களத் தேசமும் உலகமும் உணர்ந்துகொண்டன. இந்தச் சூழ்நிலையில்தான். அதாவது. எமது போராட்ட வல்லமையை நிரூபித்துக்காட்டி. எமக்குச் சாதகமான இராணுவ சமநிலையில் நின்றபடியே நாம் சமாதானத்தின் கதவுகளைத் திறந்தோம். சமாதானத்தில் எமக்கு உண்மையான பற்றுண்டு என்பதை உலகத்திற்கு உணர்த்திக்காட்டவே நாம் இராணுவ மேலாதிக்க நிலையில் நின்றுகொண்டு அமைதி வழியைத் தழுவினோம்.

போருக்கு ஓய்வு கொடுக்கும் விடயத்திலும் நாமே முன்முயற்சிகளை எடுத்தோம்.

தொடரும்...

# அறிவியல் உலகம்

## ரயில் தண்டவாளத்தில் ஜல்லிக் கற்கள் இருப்பது ஏன்?



பொதுவாக நாம் வாகனங்களில் சாலையில் செல்லும்போது, சிறிய கல் இருந்தால் கூட அது நமக்கு பல இடையூறுகளை ஏற்படுத்தும். அப்படி இருக்கும் போது ரயில் தண்டவாளத்தில் மட்டும் ஏராளமான கற்கள் நிரம்பிக் கிடக்கும். ஆனால் அது ரயில் வண்டிகள் செல்லும்போது, எந்தவிதமான இடையூறுகளையும் ஏற்படுத்துவதில்லை. அதற்கான காரணங்கள் என்னவாக இருக்கும் என்று நம்மில் பலபேர் யோசித்து இருப்போம். எனவே ரயில் தண்டவாளத்தில் அதிகமாக கற்கள் நிரம்பி இருப்பதற்கு என்ன காரணம் என்பதை தெரிந்துகொள்வோம்.

தண்டவாளத்தில் செல்லும் ரயில் அதிக எடையுடன் இருக்கும். மேலும் ரயில் வண்டிகள் வேகமாக செல்வதால், அழுத்தம் அதிகம் இருக்கும். எனவே தண்டவாளங்கள் விலகாமல் இருப்பதற்கு, தண்டவாளங்களில் ஜல்லிக்கற்கள் அதிகமாக போடப்பட்டுள்ளது. அதிக வெப்பம், நில அதிர்வு மற்றும் கடினமான வானிலையின் போதும் ரயில் தண்டவாளங்கள் சுருங்கவும் விரியவும் செய்யும். இதனால் தண்டவாளங்கள் விலகாமல் தடுப்பதற்கு, தண்டவாளங்களில் கற்கள் அதிகமாக நிரப்பப்பட்டுள்ளது. ரயில் தண்டவாளத்தில் செல்லும்போது, மரத்தின் விட்டங்கள் மூலம் ரயில் வண்டிகள் வழுக்காமல் தடுப்பதற்கு, கூர்மையான கற்கள் போடப்பட்டுள்ளது. நீரின் தேக்கத்தால் தண்டவாளங்கள் மூழ்காமல் இருப்பதற்கு, ரயில் தண்டவாளங்களில், ஜல்லிக் கற்களை வைத்து உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. களைகளின் வளர்ச்சி மற்றும் இதர தாவரங்களின் வளர்ச்சியின் காரணமாக தண்டவாளங்களில் செல்லும் ரயில் வண்டிகளுக்கு இடையூறு ஏற்படாமல் தடுப்பதற்கும், தண்டவாளங்களில் அதிகமாக ஜல்லிக் கற்கள் போடப்பட்டுள்ளது.

## தயாராகின்றது கூகுளின் தானியங்கிக் கார்



முற்றுமுழுதாக தானாகவே இயங்கக்கூடிய கார்களை வடிவமைக்கும் பணியில் பல்வேறு நிறுவனங்கள் களமிறங்கியுள்ளன. இதில் கூகுள் நிறுவனமும் காலடி பதித்துள்ளமை தெரிந்ததே. X Labs எனும் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இக் கார் வடிவமைப்பானது பின்னர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் Waymo எனும் பெயர் மாற்றத்துடன் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. Waymo நிறுவனமாது கடந்த ஒக்டோபர் மாதம் தமது தானியங்கி கார்களை முழுமையாக வடிவமைத்து முடித்திருந்தது. அக்கார்கள் சோதனை ஓட்டத்தில் இருக்கும் நிலையில் அந்த நிறுவனத்துடன் கூகுள் கைகோர்த்துள்ளது. இதன் காரணமாகவே கூகுளின் தானியங்கி காருக்கு அந்நிறுவனத்தின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கடந்த 8 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் தானியங்கி கார் முயற்சியானது சாரதிகளின் களைப்பு, போதை, கவனச் சிதறல்கள் என்பனவற்றினால் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்ப்பதை நோக்காகக்கொண்டது.

## இன்ஸ்டாகிராமில் நேரடி ஒளிபரப்பு செய்யும் வசதி

புகைப்படங்கள் மற்றும் சிறிய அளவிலான வீடியோ கோப்புக்களை பகிர்ந்து மகிழும் வசதியினைத் தரும் இன்ஸ்டாகிராம் ஆனது பல மில்லியன் கணக்கான பயனர்களை தன்னகத்தே கொண்டுள்ளது. தற்போது நேரடி ஒளிபரப்புக்களை செய்யும் வசதியினை அறிமுகம் செய்துள்ளது. முதன் முறையாக இவ் வசதி அமெரிக்காவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள அனைத்து இன்ஸ்டாகிராம் பயனர்களும் இவ் வசதியினை இலவசமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். இவ்வாறு ஒளிபரப்பப்படும் நேரடி வீடியோக்களை குறித்த நபரினை இன்ஸ்டாகிராம் கணக்கில் பின்தொடர்பவர்கள் அனைவரும் பார்த்து மகிழ முடியும்.

இதேவேளை தனது தாய் நிறுவனமான பேஸ்புக்கில் தரப்படும் வசதிகளிலில் இருந்து சற்று வித்தியாசமாகவே இவ் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நேரடி ஒளிபரப்புக்கள், பிரபல்யமான நேரடி ஒளிபரப்புக்கள் என பல்வேறு வகைகளில் நேரடி ஒளிபரப்புக்களை தெரிவுசெய்து பார்த்து மகிழ முடியும்.



## உலக அழிவைத் தடுக்க விஞ்ஞானிகள் புது முயற்சி

புவியின் வெப்பநிலையை குறைப்பதற்கான வழிமுறைகள் தொடர்பில் விஞ்ஞானிகள் கலந்துரையாடி வருகின்றனர். புவியின் வெப்பநிலை அதிகரிப்பினால் அண்டார்டிகா உள்ளிட்ட பனிப் பிரதேசங்களில் உள்ள பனிக்கட்டி உருகுவதால் கடல்மட்டம் உயரக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுகிறது. இதனால் கடலோரப் பகுதிகள் நீரில் மூழ்கக்கூடிய சாத்தியம் அதிகம் காணப்படுகிறது. இவ்வாறு வெப்பநிலை அதிகரிப்பதற்கு ஓசோன் படை அழிவதே காரணம். புற ஊதாக் கதிர்கள் புவியினுள்ளேயே மீண்டும் மீண்டும் தெறிப்படைவதனாலேயே புவி வெப்பமடைகிறது.

ஓசோன் படை தான் இவ்வளவு காலமாக புறவூதாக் கதிர்கள் உள்நுழைவதை தடுத்து வந்தது. தற்போது அவற்றின் தேய்வு அதிகரித்து விட்டதால் புறவூதாக் கதிர்கள் உள்நுழைகின்றன. இதனால் புவி வெப்பமடைவதைத் தடுக்கவும் புவியின் வெப்பநிலையைக் குறைக்கவும் உலகெங்கிலும் உள்ள பல விஞ்ஞானிகள் ஆய்வினை மேற்கொண்டு வருகின்றனர். இந்த ஆய்வின் பயனாக கால்சைட் தூசுகளை வளிமண்டலத்தில் தூவுவதன் மூலம் புவியின் வெப்பநிலையைக் கட்டுப்படுத்த முடியும் என ஹார்வர்ட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். எனினும் இதற்கு முன்பும் இந்த முறைமை கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் கூட இதனால் ஓசோன் படைக்கு பாதிப்பு ஏற்படும் என விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தனர். இதேவேளை தற்போது இந்த முறையை பரிசோதித்துள்ள விஞ்ஞானிகள் இதனால் ஓசோன் படைக்கு எந்தவிதத்திலும் பாதிப்பு ஏற்படாது எனத் தெரிவித்துள்ளனர். மேலும், இந்த கால்சைட் தூசுப்படலம் வளிமண்டலத்தில் உள்ள வெப்ப காரணிகளை ஈர்க்கும் தன்மை கொண்டதாக இருக்கும் என்றும் கூறியுள்ளனர்.



## கணினிக்கு நிகரான வேகம் கொண்ட ஸ்மார்ட் போன்



அடுத்த ஆண்டு வெளியாக இருக்கும் மைக்ரோசொ.ஃப்ட் "சர்.ஃபேஸ் ப்ரோ" ஸ்மார்ட்போன்கள் கணினிக்கு நிகரான வேகத்தில் இயங்கும் எனக் கூறப்படுகிறது. மைக்ரோசொ.ஃப்ட் சர்.ஃபேஸ் ப்ரோ 2017 ஸ்மார்ட்போனில் வழங்கப்படும் சிறப்பம்சங்கள் சார்ந்த தகவல்கள் வெளியாக துவங்கியுள்ளன. ஆனால் குறித்த மொபைல் போன் தொடர்பான விபரங்கள் முழுமையாக வெளியிடப்படவில்லை. தற்சமயம் வெளியாகியிருக்கும் தகவல்களில் இது சர்.ஃபேஸ் போன் தான் என்றும், இது ஒரு ஹைப்ரிட் போனாக இருக்கும் என்பது தெரியவந்திருக்கிறது. உலகம் அறிந்த முன்னணி பதிப்பாக காணப்படும் மைக்ரோசொ.ஃப்ட் தான் தயாரித்துவரும் உயர் ரக ஸ்மார்ட்போன் ஆப்பிள் ஐ போனை விடவும் பெறுமதியானது என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் மைக்ரோசொ.ஃப்ட் சர்.ஃபேஸ் போன் குவால்காம் நிறுவனத்தின் அடுத்த தலைமுறைக்கான வழிகாட்டியாக இருக்கும் என்றும் இது வாடிக்கையாளர்களின் மொபைல் போன் பயன்பாட்டை அடியோடு மாற்றிவிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

குறித்த மொபைல் போன் அடுத்த ஆண்டு மைக்ரோசொ.ஃப்ட் வெளியிட இருக்கும் விண்டோஸ் 10இன் செயற்பாடுகளை உள்வாங்கியிருக்கும் எனவும் நம்பப்படுகின்றது. புதிய இயங்குதளம் என்பதால் இந்த ஸ்மார்ட்போன் அதிக சக்தி வாய்ந்ததாக இருப்பதோடு அதிநவீன வடிவமைப்பையும் கொண்டிருக்கும். விண்டோஸ் 10 இயங்குதளம் கொண்டிருப்பதால் இந்த ஸ்மார்ட்போனினை கணினியாகவும் மாற்ற முடியும். குறித்த ஸ்மார்ட் போன் அடுத்த ஆண்டு முதல் நடைமுறைக்கு வரலாம் என நம்பப்படுகின்றது. இந்த ஸ்மார்ட்போனின் விலை 699 டொலர் (இந்திய மதிப்பில் ரூ.47,179) முதல் 1100 டொலர்கள் (இந்திய மதிப்பில் ரூ.74,244) வரை இருக்கும் என சந்தை வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

## விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்ட செயற்கை வைரம்



பொதுவாக புவியிலுள்ள கடினத் தன்மையான பொருட்கள் எனும் போது பலர் நினைவில் வருவது வைரம் தான். இவ் அழகான கற்கள் நம் நிச்சயதார்த்த மோதிரங்களில் உண்டு. இவை இரும்பு மற்றும் பாறைகளை வெட்டப் பயன்படக்கூடியது. விஞ்ஞானிகள் அதன் வைரத்தன்மையை அதிகரிக்கும் முயற்சியில் பல வருடங்களாக முயன்றுகொண்டுள்ளனர். ஆனால் தற்போது ஆஸி விஞ்ஞானிகள் மிக அரிய வகை வைரம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். இது ஏனையவற்றை விட கடினத்தன்மையானது என சொல்லப்படுகிறது. பெரும்பாலான வைரங்கள் கனவுரு, காபன், பளிங்குகளாக உருவாக்கப்படுகின்றன. ஆனால் அறுகோணி வடிவிலான பளிங்குகள் அவைகளை விட 58 வீதம் வலிமையானவை.

புதிய ஆய்வொன்றின் மூலம் தற்போது விஞ்ஞானிகளால் மிக வலிமையான காபன் பளிங்குகளை ஆய்வுகூடத்தில் உருவாக்க முடிந்திருக்கிறது. விஞ்ஞானிகள் இது பற்றி தெரிவிக்கையில் இவ்வைரங்கள் வழமையான வைரங்கள் உட்பட மிக திண்மத் தன்மையான பொருட்களை வெட்டும் அளவிற்கு வலிமை கூடியது என்கின்றனர். இதன் அறுகோணி வடிவம் அதனை மேலும் வலிமையாக்குவதாக ஆய்வாளர் Jodie Bradby சொல்கிறார். இது போன்ற முயற்சிகள் முன்னரே மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அவை வெற்றியளித்திருக்கவில்லை. அத்தோடு இவை நம்ப முடியாத அளவிற்கு 1000 டிகிறி வெப்பநிலைகளிலேயே மேற்கொள்ளக்கூடியதாக இருந்தன. இதற்குப் பதிலாக Bradby மற்றும் அவரது குழுவினரால் வேறு ஒரு அணுகுமுறை மூலம் இம்முறை உருவாக்க முடிந்திருக்கிறது. Dia mond anvil இனைப் பயன்படுத்தி இவர்களால் வெறும் 400 டிகிறி வெப்பநிலையிலேயே இது சாத்தியமாகியுள்ளது. மேலும் இது மற்றைய முறை யிலும் விளைத்திறனானதுடன் மிகவும் செலவு குறைந்தது எனச் சொல்லப்படுகின்றது.

உலகில் பண்டைய காலத்தில் ஆட்சிசெய்த மன்னர்கள் மற்றும் அப்போது வாழ்ந்த மக்கள் கலாசாரம் மற்றும் தொழில்நுட்பத்திலும் சிறந்து விளங்கியமைக்கான பல சான்றுகள் அகழ்வாராய்ச்சிகளின் போது கிடைத்துள்ளன. உலகில் பல நாடுகளில் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட கட்டிடங்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட பொருட்களும் அகழ்வாராய்ச்சிகளின் போது கண்டுபிடிக்கப்படுகின்றன. இவ்வாறான புராதன பொருள் ஒன்று சீனாவில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ளது.

சீனாவில் 2 ஆயிரத்து 500 வருடங்களுக்கு முன்னர் ஆட்சிசெய்த கௌஜியாங் மன்னர் பயன்படுத்தியதாகக் கூறப்படும் வாள் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மன்னரின் கல்லறையில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியின் போது இந்த வாள் கிடைத்ததாக சீன தொல்பொருள் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். வெண்கலத்தில் செய்யப்பட்டுள்ள இந்த வாள் தற்போது தயாரிக்கப்பட்ட புதிய வாள் போன்று காணப்படுவது சிறப்பம்சமாகும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

# விளையாட்டு உலகம்

## தென்ஆபிரிக்கா பயப்படக் காரணம் இதுதான்



இலங்கை கிரிக்கெட் அணியில் சில அச்சுறுத்தும் பந்துவீச்சாளர்கள் இருப்பது அந்த அணிக்கு பலம் என்று தென்ஆபிரிக்க அணியின் தலைவர் டுபிளசி தெரிவித்துள்ளார். இலங்கை கிரிக்கெட் அணி தென் ஆபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட், 3 டி20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இதற்காக மேத்யூஸ் தலைமையிலான இலங்கை அணி தென்ஆபிரிக்காவுக்கு பயணமாகியுள்ளது. இவ்விரு அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 26ம் திகதி Port Elizabeth, St George's Park மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தத் தொடர் குறித்து தென் ஆபிரிக்க அணித்தலைவர் டுபிளசி கூறுகையில், "இலங்கை கிரிக்கெட் அணியை குறைத்து மதிப்பீடு செய்யமாட்டோம். அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடர் போலவே இந்த தொடருக்கும் தயார் செய்கிறோம். பெரிய தொடர், சிறிய தொடர் என்று எல்லாம் பார்ப்பது கிடையாது. நாங்கள் இலங்கையை வீழ்த்தவேண்டும் என்பதே எங்கள் மக்கள் விருப்பம். ஆனால் அது எளிதாக இருக்காது. சமீப காலமாக இலங்கை அணி சிறப்பான ஒரு ஆட்டத்தை ஆடி வருகிறது. அந்த அணியில் சில முக்கிய வீரர்கள் இல்லாதது எங்கள் அணிக்கு சாதகமாக இருக்கும். அவர்கள் அச்சுறுத்தும் சுழல்பந்து வீச்சாளர்களை வைத்துள்ளனர். ஆனால் பந்து அதிகமாக சுழலாது என்று நினைக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

## மீண்டும் பாகிஸ்தானில் கிரிக்கெட் தொடரா?



பாகிஸ்தானில் கிரிக்கெட் விளையாடும் எண்ணம் இல்லை என்று இலங்கை கிரிக்கெட் வாரியம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. சமீபத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத் தலைவர் நிஜாம் சேத்தி மீண்டும் பாகிஸ்தானில் கிரிக்கெட் போட்டிகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். இதைத்தொடர்ந்து பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம், இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும். அடுத்த ஆண்டு இந்த அணிகளில் ஒன்று பாகிஸ்தானில் கிரிக்கெட் விளையாட உள்ளதாகவும் தகவல் வெளியாகியது.

இந்நிலையில் வெளியான இந்த தகவலுக்கு இலங்கை கிரிக்கெட் வாரியம் மறுப்பு தெரிவித்துள்ளது. இது குறித்து விளையாட்டுத்துறை அமைச்சர் ஜயசேகர தயாசிறி கூறுகையில், இலங்கை இராணுவ வீரர்களை அனுப்பிவைக்க பாகிஸ்தானில் இருந்து கோரிக்கை வந்தது. இது குறித்து நாங்கள் முடிவெடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் இலங்கை கிரிக்கெட் அணியை மீண்டும் அங்கு அனுப்பும் திட்டம் துளிகூட இல்லை என்று கூறியுள்ளார்.

## சாய்னாவுக்கு ரசிகர்கள் கடும் எதிர்ப்பு

*சீன நிறுவனத்துடன் கைகோர்த்த சாய்னாவுக்கு பேஸ்புக், டுவிட்டர் வாயிலாக ரசிகர்கள் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறார்கள். இந்திய நட்சத்திர பேட்மிண்டன் வீராங்கனை சாய்னா நேவால், சமீபத்தில் சீன தயாரிப்பான ஒரு செல்போனுக்கு விளம்பர தூதராக ஒப்பந்தம் செய்யப்பட்டார். அந்த செல்போனுடன் அவர் இருப்பது போன்ற புகைப்படத்தையும் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டு இருந்தார்.*

*இந்தநிலையில் சீன நிறுவனத்துடன் கைகோர்த்த சாய்னாவுக்கு பேஸ்புக், டுவிட்டர் வாயிலாக ரசிகர்கள் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறார்கள். 'சாய்னா தயவுசெய்து சீனப் பொருட்களை பிரபலப்படுத்தும்*




ஒப்பந்தத்தில் இணையாதீர். இது நமது தேசத்திற்கே ஆபத்தானது' என்று ஒரு ரசிகர் குறிப்பிட்டுள்ளார். இன்னொரு ரசிகர், 'நான் உங்களது தீவிர ரசிகன் தான். ஆனால் சீன தயாரிப்புபொருளை வாங்குங்கள் என்று நீங்கள் சொன்னால் அதை செய்ய மாட்டேன். நீங்களும் இந்த முட்டாள் தனமான காரியத்தை செய்யாதீர்' என்று கூறியுள்ளார். இப்படி பல ரசிகர்கள் அவரை வறுத்தெடுத்துள்ளனர்.

## வரலாறு படைத்த ரொனால்டோ

*கிளப் அணிகளுக்கான உலகக் கிண்ண கால்பந்து தொடரில் ரியல் மாட்ரிட் அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது. கிளப் அணிகளுக்கான உலகக்கிண்ண கால்பந்து போட்டி ஜப்பான் நாட்டில் நடந்து வருகிறது.*

*இதில் நடந்த 2வது அரையிறுதிப்போட்டியில் ரியல் மாட்ரிட்-கிளப் அமெரிக்கா அணிகள் மோதின. பரபரப்பான இந்த ஆட்டத்தில் ரியல் மாட்ரிட் அணி 2-0 என்ற கோல் கணக்கில் கிளப் அமெரிக்கா அணியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.*

*ரியல் மாட்ரிட் அணியின் பெஞ்சிமா 45வது நிமிடத்திலும், கிறிஸ்டியானோ ரொனால்டோ கடைசி நிமிடத்திலும்*



*கோல் அடித்து அசத்தினர்.*

*ரொனால்டோவுக்கு இது 500வது கிளப் கோலாகும். இதன் மூலம் அவர் புதிய வரலாறு படைத்துள்ளார். இறுதிப்போட்டியில் ரியல் மாட்ரிட் அணி, கஷிமா அன்ட்லெர்ஸ் அணியைச் சந்திக்கிறது. இந்தப் போட்டி எதிர்வரும் 18ம் திகதி நடைபெறுகிறது.*

## பதவியில் இருந்து விலகினார் டி வில்லியர்ஸ்



தென் ஆபிரிக்க டெஸ்ட் அணித்தலைவர் டி வில்லியர்ஸ், உடனடியாக அணித் தலைவர் பொறுப்பில் இருந்து விலகு வதாக அறிவித்துள்ளார். ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணித்தலைவராக இருந்த டி வில்லியர்ஸ் கடைசியாக ஜூனில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்றார். பின்னர் சமீபகாலமாக மூட்டுப்பகுதியில் ஏற்பட்ட காயத்தால் அவதிப்பட்டுவந்த டி வில்லியர்ஸ், கடைசியாக அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து விலகினார். தற்போது இவர் இன்னும் முழுமையாக காயத்தில் இருந்து மீளாத நிலையில், இந்த முடிவை தானாக முன்வந்து எடுத்துள்ளார். தற்போதைய டெஸ்ட் இடைக்கால அணித் தலைவராகவுள்ள டு பிளசியே முழுநேரமாக கேப்டன் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளார்.

இதுகுறித்து டி வில்லியர்ஸ் கூறுகையில், அணியின் விருப்பம் என்பதே, ஒரு தனிநபரின் விருப்பத்தை விட பலமானதாக இருக்கும். இத்தனை நாட்கள் அணித்தலைவர் பொறுப்பில் இருந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால், இத்தனை நாட்களில் நான் இரண்டு தொடர்களை தவறவிட்டுவிட்டேன். அடுத்த தொடர்களுக்கும் எனது பங்களிப்பு என்பது இருக்குமா என்பது சந்தேகம் தான். அவுஸ்திரேலிய தொடரில் டுபிளசி எப்படி செயற்பட்டார் என்பதை இந்த உலகமே பார்த்தது. அதனால் அவரே தொடர்ந்து அணித்தலைவராக செயற்படவேண்டும் என்பதே எனது விருப்பம் என்றார். அத்தோடு அவுஸ்திரேலிய அணியை அதன் சொந்த மண்ணிலேயே டுபிளசி தலைமையிலான அணி இரண்டு தொடரையும் வென்றுள்ளது.

## உலகின் தலைசிறந்த வீரர் இவர் தான்



இந்த ஆண்டுக்கான உலகின் தலைசிறந்த விளையாட்டாளருக்கான Ballon d'Or விருதை கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்ட் பெற்றுக்கொண்டுள்ளார். கால்பந்து அரங்கில் மிகவும் மதிக்கப்படும் இந்த விருதை நான்காவது முறையாகவும் கிறிஸ்டியானோ ரொனால்ட் பெற்றுக்கொண்டுள்ளார். எனது கனவு மீண்டும் நனவானது, தனிப்பட்ட முறையிலும், நான் ஆடும் அணிக்கும் இந்த ஆண்டு மிகவும் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. என் மனதில் இந்த ஆண்டு நீங்கா இடத்தைப் பிடித்துவிட்டது என்று நெகிழ்ந்துள்ளார்.

இந்த ஆண்டில் ரொனால்டோ விளையாடும் கிளப் அணியான ரியல் மாட்ரிட் தான் சாம்பியன்ஸ் லீக் கோப்பையை இரண்டாவது முறையாக வென்றது. ரொனால்டோ கேப்டனாக செயற்படும் போர்த்துக்கல் அணி யூரோ 2016இல் சாம்பியன்ஷிப்பையும் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு இந்த விருதை Lionel Messi பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

உலகின் தலைசிறந்த கால்பந்து வீரர்களின் ஒருவரான ஆர்ஜென்டீனாவை சேர்ந்த லியோனல் மெஸ்ஸிக்கு அடுத்த ஆண்டு திருமணம் என தகவல்கள் வெளியாகியுள்ளது. மெஸ்ஸியின் நீண்ட நாள் துணைவியான அன்டோனெல்லா ரோக்குஸ்ஸோ"வை அவர் மணக்கவுள்ளார். திருமணம் மெஸ்ஸியின் சொந்த ஊரில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆஷஸ் கிண்ணப் போட்டி அட்டவணை வெளியீடு

*வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆஷஸ் தொடருக்கான போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில் விளையாட இங்கிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டு (2017) நவம்பர் மாதம் அவுஸ்திரேலியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கின்றது. இதன்படி, அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கி 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை ஆஷஸ் கிண்ண தொடரின் போட்டிகள் நடைபெறவுள்ளது.*

*தொடரின் முதல் போட்டி பிரிஸ்பேனில் நவம்பர் 23ஆம் திகதியும், 2வது டெஸ்ட் போட்டி பகல்-இரவு போட்டியாக அடிலெய்டில் டிசம்பர் 2ஆம் திகதியும், 3வது டெஸ்ட் போட்டி பெர்த்தில் டிசம்பர் 14ஆம் திகதியும், 4வது டெஸ்ட் போட்டி மெல்போர்னில் டிசம்பர் 26ஆம் திகதியும், 5வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னியில் 2018ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. கடந்த 2015ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடந்த ஆஷஸ் கிண்ண தொடரில் இங்கிலாந்து அணி 3-2 என்ற கணக்கில் அவுஸ்திரேலியாவை*



*சாய்த்து தொடரை கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஆஷஸ் கிண்ணத் தொடரானது கிரிக்கெட் போர் என வர்ணிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.*

# உலகச் செய்திகள்

## குப்பைகளை வாங்கிக் குவிக்கும் சுவீடன்



சுவீடன் நாட்டில் மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக, அந்நாட்டு அரசு வெளிநாடுகளில் இருந்து டன் கணக்கில் குப்பைகளை வாங்கி குவித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சுவீடன் நாட்டில் மின்சார உற்பத்தி பெருமளவு அந்நாட்டு குப்பைகளில் இருந்து தான் எடுக்கப்படுகிறது. அதாவது குப்பைகளை மறுசுழற்சி செய்து அதை மின்சாரமாக்கி பயன்படுத்தி வருகின்றனர். அந்நாட்டில் மின்சார உற்பத்தி பெருமளவு இதன் மூலம் தான் எடுக்கப்படுவதாக கூறப்படுகிறது. அதுமட்டுமன்றி தனியார் நிறுவனங்கள் தங்களுடைய கழிவுகளை எரித்தால் கூட அதிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கு அரசுக்கு பங்கு கொடுக்கவேண்டும் என்ற கொள்கை உள்ளது எனவும் கூறப்படுகிறது.

தற்போது அந்நாட்டில் உள்ள குப்பைகளை எல்லாம் மறுசுழற்சி செய்து முடித்துவிட்டதால், மின்சாரம் தயாரிப்பதற்கு பற்றாக்குறை ஏற்பட்டு விடாமல் இருப்பதற்காக, சுவீடன் அரசு வெளிநாட்டிலிருந்து குப்பைகளை டன் கணக்கில் கன்டெய்னர்களில் இறக்குமதி செய்து மின் உற்பத்தி செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. ஆனால் சுவீடனோ இதை, மறுசுழற்சி புரட்சி என்கிறது. கடந்த 2011ஆம் ஆண்டில் வெறும் 97 சதவிகிதமாக இருந்த இந்த அளவை தற்போது அந்நாட்டு அரசு 99 சதவிகிதமாக உயர்த்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

## சுவிஸில் குடியேற அடிப்படை விதிகள்



சுவிட்சர்லாந்து நாட்டில் குடியேறவும் பணி ஒப்பந்தமாக தங்கவும் வெளிநாட்டினர்களுக்கு புதிய விதிமுறைகள் அமுலுக்கு வரவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சுவிஸில் பணி ஒப்பந்தம் மூலமாக தங்கும் வெளிநாட்டினர்களுக்கு தற்போது B permit எனப்படும் தற்காலிக குடியிருப்பு அனுமதி வழங்கப்படுகிறது. இதனை 5 ஆண்டுகள் நீடித்துக்கொள்ளவும், பின்னர் C per mit எனப்படும் நீண்டகால குடியிருப்பு அனுமதியாகவும் மாற்றிக்கொள்ளலாம். எனினும், தற்போது இந்த உரிமைகளை பெறுவதற்கு புதிய விதிமுறைகளை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். அதாவது, அடிப்படையில் சுவிஸில் குடியேறும் மற்றும் பணி ஒப்பந்தமாக தங்கும் வெளிநாட்டினர்கள் அவசியமாக சுவிஸ் தேசிய மொழியை கற்றுக்கொள்ளவேண்டும்.

பின்னர், பொதுஇடங்களில் குடிமக்களுடன் மரியாதையுடனும், கனிவுடனும் பழக வேண்டும். சுவிஸ் தேசிய பாதுகாப்பையும் சமூகப் பழக்கவழக்கங்களை மதிப்பதுடன் அந்நாட்டு பொருளாதார வளர்ச்சியிலும் பங்கேற்கவேண்டும். இதுபோன்ற விதி முறைகளை முறையாக பின்பற்றாத வெளிநாட்டினர்களின் B per mit உடனடியாக ரத்து செய்யப்படும். மேலும், C permit உள்ளவர்களின் அனுமதியானது தற்காலிக குடியிருப்பு அனுமதிக்கு மாற்றப்படும். இதுமட்டுமல்லாமல், சுவிஸில் 15 ஆண்டுகளுக்கு மேலாக வசித்துவரும் வெளிநாட்டினர்களும் இந்த விதிகளை பின்பற்றாவிட்டால் அவர்களுடைய அனுமதியும் பறிக்கப்படும் வாய்ப்புள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். எனினும், இக்கோரிக்கை தொடர்பான விவாதம் நடைபெற்ற பிறகு அமுலுக்கு வரவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## உலகிலேயே மிக மோசமான நாடு பிரான்ஸ்



சர்வதேச நாடுகளை ஒப்பிடுகையில் பிரான்ஸ் நாட்டில் அதிகளவில் இஸ்லாமிய மக்கள் வசித்து வருகிறார்கள் என்ற தவறான எண்ணம் அந்நாட்டு மக்களிடம் உள்ளதாக ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது. சர்வதேச நாடுகளில் உள்ள இஸ்லாமிய மக்கள் தொகையை பற்றி Ipsos Mori என்ற நிறுவனம் அண்மையில் ஆய்வு ஒன்றை நடத்தியுள்ளது. அதாவது, ஒவ்வொரு நாடுகளில் உள்ள இஸ்லாமியர்களின் எண்ணிக்கை தொடர்பான சரியான தகவல்கள் அந்நாடுகளின் குடிமக்களிடம் உள்ளதா என ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வில் இஸ்லாமிய மக்களின் உண்மையான எண்ணிக்கையை விட அதிகளவில் தங்களது நாட்டில் உள்ளதாக பிரான்ஸ் குடிமக்கள் எண்ணி வருவது தெரியவந்துள்ளது. அதாவது, கடந்த 2010ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் உள்ள மக்கள் தொகையில் 31 சதவிகிதத்தினர் இஸ்லாமியர்கள் என கணக்கிடப்பட்டது. ஆனால், இதே ஆண்டில் அந்நாட்டில் இருந்த இஸ்லாமிய மக்கள் தொகையின் உண்மையான எண்ணிக்கை 7.5 சதவிகிதமாகும். அதேபோல், எதிர்வரும் 2020ம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டில் உள்ள இஸ்லாமிய மக்கள் தொகையின் எண்ணிக்கை 40 சதவிகிதமாக அதிகரிக்கும் என தவறாக கணிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதற்கு எதிர்மறையாக 2020ம் ஆண்டில் பிரான்ஸில் இஸ்லாமிய மக்கள் தொகையின் எண்ணிக்கை 8.3 சதவிகிதம் மட்டுமே அதிகரிக்கும் என சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து சமூக ஆர்வலரும் இஸ்லாமியத்தை பற்றி ஆய்வு செய்துவரும் Raphael Liogier என்பவர் பேசிய போது, 'இஸ்லாமிய மக்கள் தொகை பற்றி இதுபோன்ற தவறான தகவல்கள் பரவி வருவதால் பிரான்ஸில் உள்ள இஸ்லாமியர்கள்மீதுகுடிமக்களுக்குஅதிருப்தி ஏற்படும் அபாயம் உள்ளது. இதனால் எதிர்காலத்தில் இஸ்லாமியர்களுக்கு புகலிடம் அளிப்பதில் சிக்கல் ஏற்படும்' என அவர் அச்சம் தெரிவித்துள்ளார். பிரான்ஸ் நாட்டைத் தொடர்ந்து, தென் ஆபிரிக்கா, பிலிப்பைன்ஸ், இத்தாலி, ஜேர்மனி, பெல்ஜியம், அமெரிக்கா, ரஷ்யா, கனடா இந்தியா உள்ளிட்ட நாடுகளும் தங்களது நாட்டில் உண்மைக்கு எதிராக அதிகளவில் இஸ்லாமியர்கள் வசித்து வருவதாக எண்ணி வருவது குறிப்பிடத்தக்கது.

## கண்ணீர் விட்டுக் கதறும் குழந்தைகள்



வடகொரியாவில் குழந்தைகளை கடும் வெயிலில் இரும்புத் தண்டவாளப் பாதைகளில் உள்ள பழுதுகளை சரிசெய்யவைப்பது. கற்களை உடைக்க வைப்பது போன்ற வேலைகளை கட்டாயப்படுத்தி ஈடுபடுத்தும் செயல் பார்ப்போரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. வடகொரியாவின் தற்போதைய அதிபராக உள்ளவர் Kim Jong-un. இவர் அண்மையில் உலக நாடுகளை அச்சுறுத்தும் வகையில் ஏவுகணைகள் மற்றும் அணு ஆயுத சோதனைகளை மேற்கொண்டு வருகிறார். இதற்கு பல்வேறு நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தும் Kim Jong-un தான் செய்வது தான் சரி என்பது போல் இதுபோன்ற சோதனைகளை மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது. இதற்குக் காரணம் உலக நாடுகள் மத்தியில் தாங்கள் வலிமையானவர்கள் என்றும் குறிப்பாக அமெரிக்கா, தென்கொரியா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளுக்கு இது ஒரு எச்சரிக்கையாக இருக்கும் எனவும் தெரிவித்ததாக கூறப்படுகிறது. இதுவரை மூன்று சோதனைகளை செய்துள்ள அந்த அரசு நான்காவது அணு ஆயுத சோதனையை வரும் ஜனவரி மாதம் தொடங்க உள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் வட கொரியாவில் சுமார் ஐந்து முதல் 9 வயது வரை உள்ள குழந்தைகள் ஏராளமானோர் கடும் வெயிலில் அங்குள்ள இரயில்வே தண்டவாளங்களில் உள்ள பழுதுகளை சரி பார்க்கும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். மேலும் அவர்கள் அங்குள்ள மலைகளை சிறிது சிறிதாக சுத்தியல் கொண்டு பெயர்த்து எடுக்கும் சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நாள் ஒன்றிற்கு அவர்கள் பத்து மணிநேரம் வரை வேலை செய்வதாகக் கூறப்படுகிறது. இக்குழந்தைகள் வேலை செய்யும் இடம் அந்த நாட்டு அதிபர் Kim Jong-un இருக்கும் பகுதிக்கு அருகில் உள்ளதாகக் கூறப்படுகிறது. இதில் ஒரு சில குழந்தைகள் வேலை செய்யும் போது வலி தாங்க முடியாமல் அழும் காட்சி பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இது வடகொரியாவின் சர்வாதிகாரம் என்றும் மனித உரிமை மீறல்கள் எனப் பலரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

## மக்களைக் காப்பாற்றிய இஸ்ரோ செயற்கைக்கோள்



கடந்த 12ஆம் திகதி வர்தா புயலின் தாக்கத்தால் சென்னையில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. ஆனால் உயிர் சேதம் ஏதும் ஏற்படாமல் இஸ்ரோவின் செயற்கைக்கோள் காப்பாற்றியுள்ளதாக வியக்கவைக்கும் தகவல் வெளியாகியுள்ளது. வங்கக்கடலில் கடந்த டிசம்பர் 6 ஆம் திகதி உருவாகி 12ஆம் திகதி சென்னையையே புரட்டிப்போடும் அளவிற்கு புயல் காற்று வீசி மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியது வர்தா புயல். இந்தப் புயலின் காரணமாக, சென்னையில், பலகோடி மதிப்பிலான பொருள்கள் சேதமடைந்துள்ளன. மேலும், இந்தப் புயலால், ஆயிரக்கணக்கில் மரங்கள் வேரோடு சாய்ந்து விழுந்தன. மின் மாற்றிகள், மின் கம்பங்கள், மின்கடத்தி கோபுரங்கள் சாய்ந்து விழுந்து மின்வெட்டு ஏற்பட்டது. கேபிள் டிவி வயர்களும், மின் வயர்களும், தொலைபேசி வயர்களும் அறுந்து விழுந்ததில் தொலைத்தொடர்பு முற்றிலும் துண்டிக்கப்பட்டது. கார்கள் புயல் காற்றால் தூக்கி வீசப்பட்டன. மேலும் புயலில் சிக்கி 23பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், இஸ்ரோ (இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம்) செயற்கை கோளான இன்சாட் 3DR (Insat 3DR) மற்றும் ஸ்கேட்சாட்-1 (ScatSat-1) ஆகியவை புயலின் இயக்கத்தை கன்காணித்து தகவல் அளித்ததில் சென்னை, திருவள்ளுர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் சுமார் 10,000க்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இதேபோல், ஆந்திர மாநிலத்திலும், இந்த செயற்கை கோள் கடற்கரையில் புயலின் தாக்கத்தை கன்காணித்து தகவல் வழங்கியுள்ளது. மேலும், இந்த இன்சாட் 3DR என்ற மேம்பட்ட வளிமண்டலவியல் செயற்கைக்கோள் கடந்த செப்டெம்பர் மாதம் 8ம் திகதியும், ஸ்கேட்சாட்-1 என்ற வானிலை முன்னறிவிப்பு மற்றும் சூறாவளி கன்காணிப்பு செயற்கைக்கோள் கடந்த செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதியும் விண்ணில் இஸ்ரோ செலுத்தியது குறிப்பிடத்தக்கது.

## போரின் கோர முகங்களை வெளிச்சமிட்டுக் காட்டும் பொதுமக்கள்



சிரியாவில் நடைபெற்றுவரும் உள்நாட்டு போரின் கோரமுகங்களை அந்த நாட்டைச் சேர்ந்த அப்பாவி பொதுமக்கள் சமூக ஊடகத்தின் உதவியுடன் வெளியுலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டிவருகிறார்கள். அந்த நாட்டில் கடந்த 2011ம் ஆண்டு முதலே உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது. சிரிய அதிபர் பஷார் அல் ஆசாத்தின் படைக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் பல இடங்களில் தாக்குதல்களைத் தொடுத்து வருகின்றனர். மற்றொரு புறம் ஐ.எஸ். அமைப்பினரும் சிரிய அரசு படைகளுக்கு எதிராக சண்டையிட்டு வருகின்றனர். அவர்களுக்கு எதிராக சிரிய ராணுவத்துடன் சேர்ந்து அமெரிக்க மற்றும் ரஷ்யப் படைகளும் சண்டையிட்டு வருகின்றன.

இந்த சிரிய உள்நாட்டுப் போரில் அப்பாவி மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டு உயிரிழந்து வருகின்றனர். சிரிய மக்கள் தாங்களது நாட்டில் நடைபெற்றுவரும் போர் சூழலையும், அந்தப்போரில் சிக்கி மரணத் தருவாயில் இருக்கும் தங்களது நிலைகள் குறித்தும் சமூக வலைதளங்களில் உணர்ச்சிபூர்வமான பதிவுகளை இட்டு வருகின்றனர்.




# விந்தை உலகம்



பிரேசிலின் 'இல்ஹாடா குயீமடா கிராண்ட்' என்ற தீவு பாம்புகளின் தீவு என்றே அழைக்கப்படுகிறது. பிரேசிலின் வடக்குக் கடற்கரைப் பகுதியில் உள்ள இந்தத் தீவு காடுகளும், பாறைகளும் நிறைந்தது. இங்குள்ள பருவநிலை, உலகின் விஷமிக்க பாம்புகளின் வசிப்பிடமாக இந்த தீவு அறியப்பட காரணமாக இருக்கிறது. இங்குள்ள அரியவகைப் பாம்புகளைப் பாதுகாப்பதற்காக, தீவுக்கு சுற்றுலா பயணிகள் செல்வதை பிரேசில் அரசு தடை செய்துள்ளது. இருப்பினும், ஓய்வு எடுப்பதற்காக இந்தத் தீவில் கரையொதுங்கும் மீனவர்கள் பலர், பாம்பு கடிக்குப் பலியாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

### விஷத் தோட்டம் (பிரிட்டன்)



பிரிட்டனின் நார்தம்பர்லாந்து பகுதியில் உள்ள ஆலன்விக் தோட்டம், உலகின் விஷமிக்க செடிகள் நிறைந்திருப்பதால், விஷத் தோட்டம் என்றே அழைக்கப்படுகிறது. அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டுள்ளது போல, தொடாதே என்ற அறிவிப்பு பலகைகள் இங்கு வைக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம். மரணம் எவ்வளவு கொடியது என்பதை உணர்த்தவே இந்தத் தோட்டத்தை பிரிட்டனின் நார்தம்பர்லாந்து அரச குடும்பம் கடந்த 1750ல் உருவாக்கியதாகச் சொல்லப்படுகிறது. அதீத ஆர்வமும், தைரியமும் உள்ளவர்களின் சுற்றுலாத் தலங்கள் பட்டியலில் இந்த விஷத் தோட்டத்துக்கு எப்பொழுதுமே இடமுண்டு என்று கூறப்படுகிறது.

### செர்னோபில் (உக்ரைன்)



உக்ரைனின் செர்னோபில் பகுதி உலகின் ஒதுக்கப்பட்ட பகுதியாக அறியப்படுகிறது. இந்தப் பகுதியில் கடந்த 1986ல் அணு உலை வெடிவிபத்து ஏற்பட்டது. அதனால், செர்னோபில் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வசித்து வந்த சுமார் 2 லட்சம் பேர் ஒரே நேரத்தில் அந்த பகுதியைவிட்டு வெளியேறினர். இதனால் கைவிடப்பட்ட வணிக வளாகங்கள் மற்றும் வீடுகள் என அந்தப் பகுதியே ஒரு சுடுகாடாக இப்போது காட்சியளிக்கிறது. உக்ரைனின் மற்ற பகுதிகளில் வசித்துவரும் இந்தப் பகுதி வாசிகள், அவர்களின் சொந்த வீட்டுக்குத் திரும்பச் செல்லவே அச்சமடைகின்றனர்.

### களிமண் எரிமலை (அஸர்பைஜான்)



களிமண் போன்ற மண்ணைக் கக்கும் எரிமலைகள் நிறைந்த நாடாக அஸர்பைஜான் இருக்கிறது. இங்குள்ள சில பகுதிகளுக்குச் செல்ல, அந்நாட்டு அரசே தடை விதித்துள்ளது. தரைப் பகுதிக்கு அடியில் விஷ வாயுக்கள் நிறைந்து காணப்படுவது தான் களிமண் போன்ற குழம்புகளை இங்குள்ள எரிமலைகள் உமிழ்வதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். உலகின் மூன்றில் 2 பங்கு களிமண் எரிமலைகள் அஸர்பைஜானில் தான் உள்ளன.

### டால் எரிமலை (பிலிப்பைன்ஸ்)

1600களில் டால் எரிமலையில் கிட்டத்தட்ட 30 பெருத்த வெடித்தல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வெடித்தல்களால் மகத்தான அளவிலான எரிமலைக்குழம்பு வெளிவந்துள்ளது. இந்த எரிமலை ஒவ்வொருமுறை எரிமலைக்குழம்பு கக்கும்போது, கிட்டத்தட்ட 6000பேர்களின் உயிர்களைப் பறித்துள்ளது.






















இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 18.12.2016 அன்று வெளியிடப்பட்டது.